நூலகம்
இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

ஆசிரியர்: நூலகஞானி - டாக்டர் பா. பெருமாள்
M.A., M.Lib.Sc., Ph.D.,

திரு. லேனா தமிழ்வாணன்

அமரர் தமிழ்வாணன்

திரு. ரவி தமிழ்வாணன்

திகவல் யுகத்தின் 'பிரபலங்கள்' 20 பதிப்புகள் "வாசகருக்கேற்ற புத்தகங்க
வெளியிடும் மணிமேகலைப் பிரசுரம் "அமுதசுரபி" அல்லவா!

நூலகம் : 1 ஜனவரி, 1996 இலக்கியம் : 5

மல்லிகைமுள்'' சிறுகதைத் தொகுப்புக்காக தமிழக அரசின் முதல் பரிசைப் பெற்ற ''நிஜமான'' படைப்பாளி ''ராஜ்'' - ராஜகோபால் (ஏ.வி.) 1995 டிசம்பரில் நிழல் கோபுரம் (031, 32 N 38, N-Gx) நூலை வெளியிட்டார். சங்கப்பலகை'' டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் 'சுடச்சுட' 1000 பிரதிகளை ாள்முதல் செய்துவிட்டார். மதிப்புமிகு இராம. வீரப்பபன் நூலைப் பாராட்டிய காட்சி. ''ராசியான'' டாக்டர் வெங்கடசுப்பிரமணியம் ஆசி வழங்கினார்.

மக்கள் பதிப்பகத்தின் முலபலங்கள்

மணிமேகலை பிரசுரம் - அமுதசுரபி

தமிழ்வாணன் துணிவே துணை லேனா தமிழ்வாணன்

- விளம்பரம் செய்து, வாசகர் யோசனையைப் பெற்று நூல் தலைப்பு தேர்வு செய்யும் தமிழ்ப் பிரசுர நிலையம் இது. வேறு பதிப்பகங்கள் பற்றிய தகவல் அறிய ஆவல்.
- அறிவிப்புப் பலகையில், தினமும் வாசகர்களுக்கு அனுப்பப்படும் V. P. P. எண்ணிக்கையையும், திரும்பி வரும் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு, வாசகர் கவனத்தை கவரும் பதிப்பகம் இது ஒன்றே எனலாம்.
- பயனுள்ள தகவல் நூலான **"பிரபலங்கள்"** 20—வது பதிப்பாக 1996இல் வெளியிட உள்ள—மக்கள் பதிப் பகமாகும் இது.
- தொப்பி, கருப்புக்கண்ணாடி படம் மட்டுமே முகவரி யில்போட்டு அனுப்பிய வாசகர் கடிதங்கள், சென்னை யில் சரியாக பட்டுவாடா செய்யப்பட்டதுண்டு.
- Matter of all Subjects— அமரர் தமிழ்வாணன் தோற்றுவித்த பிரசுராலயம், எல்லா பொருளிலும் நூல் வெளியிடுகிறது.
- வரிசை நூல்கள் ஏராளம். விலையும் குறைவே.
- நாவல்கள், சிறுகதைகள்—தனியார் பெயரிலும் தற்போது வெளிவருவது—வளர்ச்சி தானே!

- ☐ தினமும் சில புதிய வெளியீடுகளை வெளியிடும் நிறுவனம் இதுவே
- ☐ Packed Information for all ages.
- ☐ துணிவே துணை.
- ☐ தொடரட்டும் பயனுள்ள புத்தகப் பணி.

மணிமேகலை பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447,

4, தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை-600017

தொலை பேசி 4342926 : தொலை நகல் : 4346082

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக துணைவேந்தராக மொழியியல் அறிஞர் டாக்டர் கே.கருணாகரன் (54) பதவி யேற்றார். இவர் கோவை பெரிய கடைவீதியைச் சேர்ந்தவர்.

தமிழக அரசின் 1995 ம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதி தாசன் விருது, வேதாசலம் எனகிற கவிஞர் த.மறைமலை யானுக்கு ரூ 10 000 ரொக்கப் பரிசுடன் கிடைத்துள்ளது.

CALIBER 96 - National Convention on Library Database Management : 15-17 February 1996 at M S University, Vadodara Contact S M. Salgar, INFLIBNET, P.B. No. 4116 Navrangpura Ahmedabad 380 009. Phone: 079-642597 /6569695 Fax : 079-406990 E-mail: salgar@nfahd ernet in.

Source : Page 10 Express Computer 15-1-1996



சங்கப் பலகையில் "கருவறை வாசனை"



டாக்டர். அப்பாஸ் இப்ராகிம்

டிஸ்ட்ரிபுயூசன் நெட்வொர்க் (பி) லிமிடெட்

நிர்வாக அலுவலகம் :

119, திருமலைநகர், பெருங்குடி, சென்னை-600 096.

தொலைபேசி : 4925358 ஃபாக்ஸ் : 4927243

கலைஞர் கருணாநிதியை அறிமுகம் செய்து வைக்கவோ, அவரின் எழுத்தை எடைபோட்டு காட்ட வேண்டிய அவசியமோ இன்று தமிழகத்தில் இல்லை.

ஆனால், கனிமொழி கருணாநிதி எழுதிய 'கருவறை' வாசனை 'கவிதை நூல் அறிமுக கட்டத்தில் இருந்தாலும், எழுத்தின் அழுத்தத்திலும், வலிமையிலும் இமாலய அளவில் உயர்ந்து நிற்கிறது.

ஏ. வி. எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் 31. 12. 95 அன்று மாலை 6 மணியளவில் நடைபெற்ற விழாவில் சா. கந்தசாமி முதல் பிரதியை வெளியிட்டார்.

விழாவில் கலந்து கொண்ட டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் இலக்கிய அங்கீகாரம் அளிக்கும் வகையில் 1000 பிரதிகளை 'சங்கப் பலகை' வாங்கும் என தீர்மானித்து, அதை டாக்டர் வேங்கட சுப்ரமணியன் மூலம் மேடையில் அறிவிக்கச் செய்தார்.

நிகழ்ச்சி நடக்கும் இடத்திலேயே தரத்தை சீர் தூக்கிப் பார்த்து, ஆய்வு செய்து தீர்மானிப்பதில் வல்லவரான, 'இன்பர் மேஷன் 'சைன்டிஸ்ட்' டாக்டர். அப்பாஸ் இப்ராகிமின் 'சங்கப் பலகை'யில் அங்கிகாரம் பெற்றுள்ள 'கருவறை வாசனை' கனிமொழி கருணாநிதிக்கு இலக்கிய ஆர்வத்தை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

நூல் வெளியீட்டு விழா
'சங்கப் பலகை'யில் அரங்கேற்றம்

பிரபல கணக்காய்வாளரும், திரைப்பட தணிக்கைக் குழு உறுப்பினருமான ஏ. வி. ராஜகோபால் (ராஜ்) எழுதிய 'நிழல் கோபுரங்கள்' சிறுகதை தொகுப்பு புத்தக வெளியீட்டு விழா சமீபத்தில் (18. 12. 95 மாலை 6-30 மணிக்கு, பாம் குரோவ் ஓட்டலில்) நடைபெற்றது.

ஆர். எம். வீரப்பன் தலைமை ஏற்று புத்தகத்தை வெளியிட 'சங்கப் பலகை' தலைவரும் மேலாண்மை இயக்குநருமான டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர்கள், விநியோக விற்பனையாளர்கள், பதிப்பாளர்கள், வாசகர்கள் பயன்பெறும் வகையில் சிறந்த திட்டத்தை உருவாக்கி, 'சங்கப் பலகை'யாக தந்திருக்கும்

பதிவு அலுவலகம் :
59/5, 4-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020.
தொலைபேசி : (044) 412083 ஃபாக்ஸ் : 4927243

டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் 'நிழல்கோபுரங்கள்' புத்தகத்தின் 1000 பிரதிகளை சங்கப் பலகை வாங்கும் என மேடையிலேயே அறிவித்தார்.

எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில், தரமான நூல்களை அங்கீகாரம் செய்வதில் டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் இன்று முன்னணியில் இருக்கிறார்.

'சங்கப் பலகை'யின் துரித நடவடிக்கைக்கும், திட்டத்தை தமிழகம் முழுவதும் விரைந்து பரவச் செய்வதிலும், டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் கணிப்பும், வழிகாட்டுதலும் பாராட்டுக் குரியது.

'நிழல் கோபுரங்கள்'— புத்தகத்தை ஆய்வு செய்து ஆர். எம். வீரப்பன், ஞான ராஜசேகர், எஸ். போஸ், கீதப்பிரியன், டாக்டர் அமிர்தலிங்கம், டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் பாராட் டிப் பேசினார்கள்.

'சங்கப் பலகை'
ஆட்சிக்கலை ஆய்வுப் பட்டறை

மணலி எஸ். ராமகிருஷ்ணனின் ஆலோசனையின் பேரில், துவங்கப்பட்ட 'சங்கப் பலகை' ஒரு சில மாதங் களிலேயே தமிழகத்தில் வேகமாக தன் இலக்கியப் பணியைச் செய்து வருகிறது.

எழுத்தாளர், புத்தக வெளியீட்டாளர்கள், விற்பனை விநியோகஸ்தர்கள் மற்றும் வாசகர் பேரவையின் இயக்கத்தை வடிவமைத்து, வழி நடத்தி வரும் டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் ஒரு சிறந்த இலக்கிய வாதியும், சிந்தனாவாதியும் ஆவார்.

'சங்கப் பலகை' இலக்கியத்துக்கு அங்கீகாரம் அளிப்பதற் காகவும், தொண்டு நிறுவனமாக மட்டுமே செயல்படக் கூடிய தாக இருந்து விட்டால் அதன் பலன் குறிப்பிட்ட ஒரு சாரா ருக்கு மட்டுமே சென்று சேர்ந்து விடும்.

அது வளர்ந்து பருவமெய்தியவர்களுக்காகவும் இருக்கலாம் அல்லது மூத்த தலைமுறையினருக்காகவும் இருக்கலாம். ஆனால் நாளைய சமுதாயத்திற்கு 'ஆணிவேரான' இளைய தலைமுறையினரின் நலனுக்கு, கல்வி அறிவு உரத்திற்கு சங்கப் பலகை செய்ய வேண்டியது என்ன? என்கிற அவரின் தீவிர சிந்தனைக்கு வடிகால்தான் 'சங்கப் பலகை'யின் மாதாந்திர கூட்டங்கள். அந்த கூட்டங்கள் வெறும் இலக்கிய சர்ச்சையாகவும், விவாத மேடையாகவும் இருந்து விட்டால்... அது எடுத்துக் கொண்ட தலைப்புக்கும், குழுமிய கூட்டத்தாருக்கு மட்டுமே ஏற்புடையதாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட செயல் வடிவமாகவோ ஆகிவிடும்.

நாளைய சமுதாயத்தைத் தூண்களாகத் தாங்கப் போகிற இளைபாரதத்தினர். தத்தம் வசதிக்கேற்ப படிக்கிறார்கள், துறையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் வேலை வாய்ப்புகள் ஒரு பகுதியினருக்கு மட்டுமே கிட்டுகிறது. மற்றவர்கள் நிலை..... நாடறிந்த விஷயம்!

அப்படி வேலை கிடைத்தவர்கள், தங்கள் அலுவலக அல்லது நிர்வாக நடத்துதலில் திறமையானவர்களாக, சாதுர்யமானவர்களாக, விழிப்புணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்களா என்பதைப் பற்றி அறிந்துக் கொள்ள முயன்றோமேயானால் வெற்றிடங்கள் ஏராளமாக உள்ளதை அறிய முடிகிறது.

படித்தவர்கள், படித்துக் கொண்டிருப்பவர்கள், படிக்கபோகிறவர்கள், இவர்களுக்கு இன்றைய கால கட்டத்தில் மிக மிக அத்யாவசியமான விழிப்புணர்வுக்குத் தூண்டுகோலாக திட்டங்களையும், கல்வி முறைகளையும் உருவாக்க வேண்டும். அதற்கு கற்றரிந்தச் சான்றோர்களின் அனுபவ அறிவும், கல்வி ஞானமும் வழி நடத்த வேண்டும். அப்போது தான் சிறந்த எதிர்கால சமுதாயம் உருவாகும்.

இதைக் கருத்தில் கொண்டு 'சங்கப் பலகை' தன்னுடைய அடுத்தக் கட்ட நடவடிக்கையாக மாதத்திற்கு ஒன்று அல்லது

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் ஆய்வுப் பட்டறைகளை நடத்துவதென முடிவு செய்துள்ளது.

மூத்த தலைமுறையினர், இளைய தலைமுறையினர், சிறார்களுக்கான ஆய்வுப் பட்டறைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடத்தப்படும்.

அதன் துவக்கப் பணியாக 7-1-96 அன்று ஆட்சிக்கலை ஆய்வுப் பட்டறையை 'சங்கப் பலகை' நடத்தியது.

ஃ ஆட்சிக்கலை பற்றிய தேசிய கருத்தரங்கை இந்திய ஆட்சிப் பணிகளுக்கான தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை சென்னையில் நடத்துதல்.

ஃ அறிவியல் தொழில் நுட்ப முதல் நிலை மாணாக்கர்களை இந்திய ஆட்சிப் பணி படிப்புக்கும் திரும்பும்படி ஊக்குவித்தல்.

ஃ இந்திய ஆட்சிப் பணி படிப்புக்கான மாணாக்கர்களை கிராம மட்டத்திலிருந்தும் முனைப்பித்தல்.

ஃ IAS, IBS, IRS, IES, ISS பயிற்சிக்கான, நூல்களை கிராமங்கள் வரை 'சங்கப் பலகை' மூலம் வீட்டுக்கு வீடு அளித்தல்

—இவைகளை நோக்கமாகக் கொண்டு பல்வேறு தலைப்புகளில் ஆய்வுப் பணி தொடரும்.

- □ அரசும், ஆட்சியும்,
- □ பொறுப்பான எதிர்கட்சிகள்
- □ பொறுப்பான நீதி மன்றங்கள்
- □ பொறுப்பான பத்திரிகைகள்
- □ பொறுப்பான நிர்வாக அதிகாரிகள்

□ கூட்டாட்சி அமைப்புள்ள நாட்டுக்கு மாநில கூட்டமைப்பைக் கொண்ட தேசிய கட்சிகள்.

□ தகவல் உரிமை

இப்படி எண்ணற்ற தலைப்புகள், அந்தந்த துறைக்கு ஏற்ற வகையில் முன்வைத்து ஆய்வு செய்யப்படும்.

ஆட்சிக் கலை ஆய்வுப் பட்டறைக்கு முன்னாள், இந்நாள் IAS அதிகாரிகள், நீதிபதிகள், வருவாய் துறை முக்கியத்தர்கள், கல்வி மற்றும் பொது நிறுவனங்களைச் சார்ந்தவர்களை பெருமளவில் அழைத்திருந்த போதும், பங்கேற்றக்காமல் போனவர்களே அதிகமாக இருந்தது, அவர்கள் வாய்ப்பை தவறி விட்டார்கள் என்பதற்கு உதாரணமாகிறது.

ஆட்சிக் கலை ஆய்வுப் பட்டறையில் கலந்துக் கொண் டோர் வித்திட்டார்கள் அது ஆல்போல் தழைக்கும் என்பதில் ஐயமில்லை.

'சங்கப் பலகை தலைவரும், மேலாண்மை இயக்குநருமான டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் தன்னுடைய முன் வரைவில் குறிப்பிட்ட கருத்துக்கள்

ஃ தாய் மொழியான தமிழின் துணையோடு முயன்றால் இந்திய ஆட்சிப் பணியில் தமிழகம் கணிசமான இடத்தைப் பெற முடியும்.

ஃ இந்திய ஆட்சிப் பணிக்கான, தமிழில் எழுதப்பட்ட நூல்களை 'சங்கப்பலகை'யின் 5000 கிளைகள் மூலமாக கிராமங்கள் தோறும், வீட்டுக்கு வீடு சுழல் நூலகம் மூலமாக எடுத்துச் செல்லுதல்.

ஃ அறிவியல் மற்றும் தொழில் நுட்ப இறுதியாண்டு படிப்பில் இருக்கும் மாணவர்களுக்கு, சங்கப் பலகையின் ஆட்சிக் கலை ஆய்வுப் பட்டறை மூலம் தமிழக மெங்கும் அவர்களின் கல்லூரியிலேயே, மாதாந்திர கருத்தரங்குகளை மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமைகளில் நடத்துதல்,

ஃ இந்திய ஆட்சிப் பணிக்கான தேர்வு எழுத போகும் மாணாக்கர்களுக்கு தேர்வுக்கு முந்தைய மாதத்திலேயே, தக்க முன்னோடிகளை அழைத்து கருத்தரங்கை 2 நாட்களுக்கு நடத்துவதின் மூலம், அதே வேகம். முனைப்புடன் செல்லும் தமிழக மாணவர்கள் சாதனை படைப்பார்கள் என்கிற எதிர்பார்ப்பு.

ஃ உணர்வாலும், நடப்பிலும் மாறும்போது மட்டுமே, நம் நாட்டுக்கு நிஜமான பொறுப்பாட்சி என்பது கண்ணில் பார்க்க முடியும், 'சங்கப் பலகை'யின் இந்த ஆய்வுப் பட்டறை அதற்கான வழிமுறைகளைத் தேடி இந்திய மக்களுக்கே அதை வெளிச்சமாக்கி காட்டி விடும்.

ஃ தலைமை குணங்களை, ஆட்சிப் பணிக்கு படிக்கின்ற வர்களுக்கு ஏற்படுத்துவதற்கான வழி முறைகளை கண்டறிதல் இதை ஆரம்பத்திலிருந்தே வளர்க்க திட்டமிடுவது. எதிர் காலத்தில் இந்திய ஆட்சிப் பணிக்கு வருகின்றவர்களை அடிமைப் பணிக்கு சரிந்து போய் விடாமல் காப்பாற்ற உதவக் கூடும்.

டாக்டர் அப்பாஸ் இப்ராகிம் அவர்களின் எண்ணற்ற கருத்துகள் சிந்தனைத் தூண்டுதலுக்கு திசை திருப்பியது.

கருத்தரங்கில் கலந்துக் கொண்ட முக்கியஸ்தர்களில், டாக்டர் வேங்கடசுப்ரமணியம், மணலி ராமகிருஷ்ணன், எஸ். போஸ், ஏ. வி. ராஜகோபால், வீ. செ. கந்தசாமி ஆகியோர், முறையே கல்வி, வருமான வரித்துறை, கணக்கு ஆய்வு, நீதி மன்றம் பற்றிய துறைகளைப் பற்றி ஆணித் தரமான கருத்துக்களை ஆட்சிக்கலை ஆய்வுப் பட்டறையில் முன்வைத்தார்கள்.

'சங்கப் பலகை'யின் சகாப்தத்தில் இந்தியா மறுமலர்ச்சி யைக் காணப் போகிறது என்பதில் ஐயமில்லை.

உலக நாடுகளில் இந்தியாவை முன்னணியில் நிறுத்த, சிறந்த நிர்வாகத்தை உருவாக்க அடிப்படை உந்து தலை 'சங்கப் பலகை' விசை கொடுக்கத் துவங்கி விட்டது.

எம் கே மோகன் சுந்தர்

கோவிந்தசாமிக்கு திருவள்ளுவர் விருது

1995-96 ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ் பேராசிரியர் கோவிந்தசாமிக்கு வழங்கப்படுகிறது திருக்குறள் நூலின் நெறிகளை சிறந்த முறையில் மக்களிடையே பரப்பும் தமிழ் அறிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து ஆண்டு தோறும் இந்த விருதை அரசு வழங்கி கௌரவித்து வருகிறது. கோவிந்தசாமிக்கு ரூ. 20,000 ரொக்கப் பரிசும் பொன்னாடையும் சான்றிதழும் வழங்கப்படும்.

தென்னாப்பிரிக்கா, சிஷெல்ஸ் மொரிஷியஸ், நாடுகளுக்குச் சென்று இன்று தாயகம் திரும்பும் வெற்றி நிறுவனர் பதிப்புச் செம்மல் ச.**மெய்யப்பன்** அவர்களையும், குமுதம் துணை ஆசிரியர் **லேனா தமிழ்வாணன்** அவர்களையும் அன்புடன் வரவேற்கிறோம்.

ஆசிரியர், நூலகம் இலக்கியம்

சிறந்த சிற்றிதழுக்கான பரிசு

1995 ஆம் ஆண்டில் துவங்கி, வெளியான 38 சிற்றிதழ்களில் தரமான படைப்புகளுடன் தொடர்ச்சியாக வெளிவந்த

"நூலகம் இலக்கியம்"

6, மு. வ. தெரு சென்னை-106

சிறந்த இதழாக பொள்ளாச்சி நசனால் தேர்ந்தெடுக்கப்பட்டு ..... பாராட்டிப் ..... பரிசு அனிக்கப்படுகிறது.

அ. ராஜா சொர்ண சேகர்
வாரமுரசு
2-C/8, நடராஜா காலனி,
சிவகாசி—626 123.

பொள்ளாச்சி நசன்
9-1-96
சம்பத் நகர்,
சூளேஸ்வரன் பட்டி
பொள்ளாச்சி-642 006

சிற்றிதழ்கள் 1995

95-ல் தொடங்கி வெளியான 38 இதழ்களின் பட்டியல்

-பொள்ளாச்சி நசன்

நூலகம் இலக்கியம்
சித்தர் உலகம்
சலங்கை
ஈழமுரசு
நுணுக்குக்காட்டி
தமிழர் முழக்கம்
தமிழ்மண்
மள்ளர் மலர்
நமது தாயகம்
சேனாதிபதி
தன்னனானே
திரட்டு
சதுக்கப்பூதம்
படர்க்கை
கருத்து
அருணளின் இளங்கதிர்
தமிழ்ப் புதுவை
உயிர்
மக்கள் பண்பாடு
கோடாங்கி
நமது அலை
சந்திரோதயம் மாத இதழ்
நிலா
அச்சமில்லை
தூவல்
கன்மலை
தோழி (மாத இதழ்)
பயற் பறவை
அகரம்
ஒளிரும் பாதை
.....
... ...
முதலியன

சிக்கனம்!

கவிஞர் சுரதா

எப்படியும் வாழ்வதுதான்
வாழ்க்கை என்றே
எண்ணுபவன் பொறுப்பற்ற
மனிதனாவான்!
இப்படித்தான் நாம் வாழ
வேண்டுமென்றே
எண்ணுபவன் சமூகத்தில் உயர்ந்
தோனாவான்!

உப்பாக இருந்தாலும்,
நீரானாலும்
உபயோகப்படுத்துவதில் அளவு
வேண்டும்!
அப்படி நாம் அளவறிந்து
பயன்படுத்தும்
அதன் பெயரே சிக்கனமாம்
அறிந்து கொள்வீர்!

தமிழில் மிகப் பெரிய நூலகம்

திருமதி. கலா சொக்கலிங்கம் B.Sc. BLIS (MLIS),
நூலகர், M.W.A. MATRICULATION HR. SEC. SCHOOL,
GOPALAPURAM, MADRAS - 600 086.

□ சென்னை, லிங்கி செட்டித் தெரு 105 எண்ணுள்ள கட்டிடத்தில். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆதரவில், அப்போதைய சென்னை மாநில ஆளுநர் விஷ்ணுராம் மேதி அவர்கள் தலைமையில் அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த திரு. எம். பக்தவச்சலம் அவர்களால் 24.8.1958 இல் திறந்து வைக்கப்பெற்றது.

□ இந்த நூல் நிலையத்தை அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த காமராஜர் அவர்கள் திறந்து வைப்பதாக ஒப்புக்கொண்டார். ஆனால், குடியரசுத் தலைவர் வந்தமையால், அவருடன் வெளியூர் பயணம் செல்ல வேண்டியதிருந்ததால், திரு. பக்தவச்சலத்தைக் கொண்டு நூலகத்தைத் திறப்பிக்கச் செய்யும்படி சொன்னாராம்.

□ நூலக நுண் கலையில் உலகப் புகழ் பெற்ற பெரும் பேராசிரியர், பத்மஸ்ரீ டாக்டர். எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் மேற்படி விழாவில் சிறப்புரை நிகழ்த்தினார்.

□ மறைமலை அடிகள் தமது ஆராய்ச்சிக்கெனத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கி வைத்திருந்தார்.

□ 15.9.1950-இல் அடிகளார் இறைவனடி சேர்வதற்குச் சில நாட்களுக்கு முன் (உயில்) விருப்ப ஆவணம் எழுதியதில் தமது நூல் நிலையத்தை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் ஒப்புவித்து, தமது பெயரால், பொதுமக்களுக்குச் சென்னையிலேயே தகுந்த இடத்தில் நூலகம் அமைத்து இலவசமாக நடத்தும்படி குறிப்பிட்டிருந்தார்.

□ இப்போது சிறப்பாக அமைந்துள்ள இந்த நூல்நிலையக் கட்டிடம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்காக வாங்கப்பெற்றது.

□ ஆயினும் அடிகளாரின் கருத்துப்படி, சிறந்த இடத்தில் அமைந்துள்ள இக் கட்டிடத்தில் நூல் நிலையம் திறக்கப் பெற்றிருப்பது அனைவரும் போற்றி மகிழ்வதற்கு உரியது.

□ அடிகளார் சேகரித்து வைத்திருந்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களோடு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொகுத்து வைத்திருந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் இங்கே உள்ளன. இப்போது மேலும் பல ஆயிரம் நூல்கள் சேர்ந்துள்ளன.

□ மொழி, வரலாறு, தத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்களுக்கு வேண்டிய அரிய நூல்கள். அனைத்தும் இங்கே இடம் பெற்றுள்ளன.

ஆராய்ச்சி செய்ய வருகிறவர்களுக்கு இங்கே வசதிகள் செய்து தருகின்றனர்.

□ இங்கே எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் பலரும் நாள் தோறும் வந்து செல்வதைக் காண முடிகிறது.

[] மற்றும் நூலகத்தின் அடித்தளத்தில் சாதாரண வாசகர்களுக்காக ஒரு நூலகப் பகுதி உள்ளது. வைப்புத் தொகை (DEPOSIT) செலுத்தி, நூல்களை எடுத்துச் செல்லலாம்.

□ குறிப்பாக இத்தகைய சிறப்பான நூலகம் தமிழகத்தில் வேறு எங்குமே கிடையாது என்று பலரும் கூறுகின்றனர்.

□ நூலகக் கட்டிடம் பல லட்சரூபாய் மதிப்புடையது.

□ இப்போது மேற்படி நூலகம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நிர்வாக இயக்குநரும் - ஆட்சியாளருமான இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ. அவர்களின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

வரப்பெற்றோம்

கற்பகம் புத்தகாலயம்

18, ராஜாபாதர் தெரு
தியாகராய நகர், சென்னை-600 017.
புதிய வெளியீடுகள்

☐ **மனம் என்னும் மேடை.** மனநல மருத்துவர் டாக்டர் ருத்ரன். 1994. ப. 112. ரூ. 18 கற்பகம் புத்தகாலயம். சென்னை வானொலி நிலையத்தில் தொடராக ஒலிபரப்பப்பட்டது. மனநலம்—மனநோய்கள் தன்மை, தீவிரம், தாக்கம், அறி குறிகள், அடையாளங்கள் இவற்றோடு மனத்தின் செயல் பாடு குறித்தும் சுருக்கமாகவும் தெளிவாகவும் இந்நூல் விளக்குகிறது என்கிறார் டாக்டர் பி. பி. ராஜன் துணை வேந்தர், தமிழ் நாடு எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை, பொதுமக்களுக்கு பயனுள்ள நூல்.

☐ **உள்ளத்தைக் கிள்ளியவர்கள்.** "தாமரைமணாளன்" 1994. ப. 104. ரூ 15 கற்பகம் புத்தகாலயம், 'வாசுகி' கடைசி பக்கக் கட்டுரைகளின் தொகுப்பு. உண்மை, ருசி மிக்க நூல்,

☐ **சிவபாரதியின் சிறுகதைகள்.** அரு. வி. சிவபாரதி. அக்டோ பர், 1995, ப. 64. ரூ 11. கற்பகம் புத்தகாலயம் 12 சிறுவர் சிறுகதைகள் சிறுவர் இலக்கியத்திற்கு புதிய கொடை,

☐ **தாகூரின் கீதாஞ்சலி,** ரவீந்திரநாத் தாகூர், தமிழில்: மானோஸ், 1994 ப. 98, ரூ 15. கற்பகம் புத்தகாலயம். நோபல் பரிசு பெற்ற கவிதை, கருத்தைத் தழுவியே மூலத் தின் உட்பொருள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

☐ **ரோஜா மலரே ராஜகுமாரி,** பட்டுக்கோட்டை பிரபாகர். 1995 ப. 164. ரூ 25. கற்பகம் புத்தகாலயம், இரண்டு விறு விறுப்பான 'க்ரைம்' நாவல்கள் இந்நூலில் இடம் பெற் றுள்ளன. சைக்கோகினாம் கொண்டது நூலின் தலைப்பு குறு நாவல்.

☐ **ப்ரொஃ: பஷனல் கில்லர் கிரைம்** எண்டமூரி வீரேந்திரநாத். தமிழில். சுசீலா கனகதுர்கா. 1995. ப 152. ரூ. 25, கற்பகம் புத்தகாலயம். சஸ்பென்ஸ் நிறைந்த விறுவிறுப்பான நாவல் இது.

☐ **கோல்டு பிஸ் கெட்.** எண்டமூரி வீரேந்திரநாத். தமிழில், சுசீலா கனக துர்கா. 1995 ப. 400. ரூ. 68, கற்பகம் புத்த காலய வெளியீடு. கடத்தல் தொழில் பின்னணியில் சிந்த னைக்கு விருந்தாகும் சிறந்த துப்பறியும் நாவல். வாசகர் கற்பனைக்கு சவால் விடும் மர்ம நாவல்.

☐ **லிப்கோவின் உங்கள் இல்லம்.** வசுதா வரதன்—வித்யா சரண்யன், 1995. ப 123. ரூ. 30. பதிப்பகத்தார்: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி தியாகராய நகர் (ரங்கநாதன் தெரு) சென்னை-600 017. நூலின் உள்ளே உள்ள லீட்டுக் குறிப் புகள்: சமையலறைப் பராமரிப்பு; துணிகளைப் பாது காக்க; வீட்டு சாதனங்கள்; சேமிப்பு; உட்புற அலங்காரம், செடிகள், பூக்கள் கை வைத்தியம் (பாட்டி, வீட்டு வைத் தியம்) அழகுக் கலை, பிரயாணம், சமூக சேவை பற்றி பயன் மிக்க தகவல் களஞ்சியம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய **தகவல் நூல்.**

☐ **கவிச்சுவையமுது.** அருட்கவி காசி. எம். ஏ. எம். எட்., 1995. ப. 60. ரூ. 7. வெளியீடு நியூ புக் ஸ்டால் 290, பெரிய கடை வீதி, அருப்புக்கோட்டை—526 101. நல்ல கவிதை நூல் என்கிறார் அமரர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்,

'அன்பே கடவுள் என்றறிவோம்;
அன்பும் சிவமுமே ஒன்றறிவோம்'—இது
திருமந்திர மறைமொழியை நினைவூட்டுகிறது.

☐ **அறிவின் திறவு கோல்.** துரை. சந்திரசேகரன். 1995, ப. 106. ரூ. 20. அறிவுப் பொன்னி பதிப்பகம். 1—ஏ, சோதி நகர், வடலூர்—607 303, வானொலி உரைக்கட்டு ரைத் தொகுப்பு. எழுத்தாளர் பிரபஞ்சன் மதிப்புரை பெருமை சேர்க்கிறது.

☐ **காலம் தந்த தலைவர்,** துரை. சந்திரசேகரன், 1995. ப. 156 ரூ 30, அறிவுப் பொன்னி பதிப்பகம. பெரியார் இல்லம். வடலூர்—607 303. தெ. ஆ. வள்ளலார் மாவட்டம் மானமிகு திரு. கி. வீரமணி அவர்களின் 50 ஆண்டு பொது வாழ்வின் மகிமையை விளக்கிச் சிறப்பிக் கும் சிறந்த நூல், **சுயமாக சிந்தி** என்பார் பெரியார், தமிழ் சமுதாயம் நடைமுறைப்படுத்தட்டும்,

அஞ்சலி

□ கோமல் சுவாமி நாதன் (61) (1935—1995)

அவர் ஒரு நல்ல படிப்பாளி. எந்தப்புத்தகம் மார்கெட்டுக்குப் புதுசா வந்தாலும் அவர் கையிலே இருக்கும். அது நியூக்ளியர் பத்திரிகையானாலும், சரி, வனவிலங்கு பத்திரிகை இருந்தாலும் சரி...

'முப்பது நாட்களில் மலையாளம்' புத்தகத்தை **வாங்கிப்** படிச்சு, மலையாளம் கத்துக்கிட்டவர் அவர்.

—கோமல்... மகன் சத்யமூர்த்தி. 12.11.95 ஆனந்தவிகடன் பக்.38: எஸ். பி. அண்ணாமலை.

□ இதயம் பேசுகிறது. 12.11.95. ஸ்ரீராம். முதல் பக்கம்.
கோமல் சொன்னது போல்... கலைப்படங்கள்...

□ தினமணி—நாளிதழில் 29.10.95 சுபமங்களா பத்திரிகை ஆசிரியர், நாடக ஆசிரியர் காலமானார்.

□ க. க. (த.மா.) செயலாளர் ஆர் நல்லக்கண்ணு...
சிந்தனையாளர் கோமல்...

□ மார்க்சிஸ்ட்கட்சி : மனித நேயம் நிறைந்தவர்.

□ நூறுவிதப் பூக்களுக்கும் நீருற்றியவர்... ஞானி (தின மணி)

□ வண்ண நிலவன் : ஒரு கலாசார பாலம். இந்தியா டுடே

□ நேர்மையாளருக்கு வீர வணக்கம். நக்கீரன் 11/95.

காலமானார் —ரா. வீழிநாதன்

சென்னை அக் 21— பிரபல மொழிபெயர்ப்பாளர் ரா. வீழிநாதன் [75] சென்னையில் வெள்ளிக்கிழமை காலமனார். அவருக்கு மனைவி, இரண்டு மகள், ஒரு மகன் உள்ளனர்.

கல்கி ஆசிரியர் குழுவில் இவர் பணியாற்றியவர். சிறு கதைகள், கட்டுரைகள், பயணத்தொடர்கள், நாடகங்கள், திரைப்பட விமர்சனங்கள் என தற்கால இலக்கியத்தின் பல் வேறு பிரிவுகளிலும் பங்காற்றினார். இந்தி, குஜராத்தி, வங்காள மொழி படைப்புகளை தமிழ் மொழி பெயர்த்துள் ளார். இந்தி எழுத்தாளரான பிரேம்சந்தை தமிழ் எழுத்தாளர் என்றே தமிழ் வாசகர்கள் கருதும்படி செய்த பெருமையும் ராஜாஜியின் பஜகோவிந்தத்தை இந்தியில் மொழி பெயர்த்த பெருமையும் இவருக்கு உண்டு. கல்கி முதலான தமிழ் எழுத் தாளர்களின் படைப்புகளை இந்தியில் மொழி பெயர்த்தவர், எம். எஸ் சுப்புலட்சுமி நடித்த மீரா இந்திப் படத்தில் பணி புரிந்ததோடு தமிழ் இயக்குநர்கள் சிலரின் இந்தி மொழி மாற்றுப்படங்களிலும் இவர் பங்காற்றியுள்ளார்,

நூலகர்

ஒரு தூதுவர், சமூக உறவாளர்

— பேராசிரியர் எழிலமுதன்

''தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது''

உலக அரசியலில் தூது செயற்பட வேண்டிய பாங்கினை திருக்குறள் இப்படி நெறிப்படுத்துகிறது.

தொகுத்துச் சொல்வது, சொல்லியவற்றுள் பயனற்ற நீக்குவது, மகிழுமாறு சொல்லி நன்மை ஏற்படச் செய்வது தூதுவரின் கடமையாம்.

அரசியல் உறவாளரான தூதுவருக்குத் தேவையான சிறப்பியல்புகளே இக்குறளால் லலியுறுத்தப்படும் நீதி.

சமூக உறவாளரான நூலகரும் ஒரு வகையில் தூதுவரே. எந்த வட்டாரத்திலும் அவர் நூலறிவைப் பரப்புகையில் இக்குறள் நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நூலகம் ஏற்பட நாம் முயல் வேண்டும்'' என்று நமது முதல் பிரதமர் **ஜவஹர்லால் நேரு** 1955-ல் ஓர் அறைகூவல் விடுத்தார்; ''பண்டிதர்களுக்கும் மேதாவிகளுக்கும் நூலகம் பயன்படுவதோடு நின்று விடாமல் எல்லா மக்களும் வாசிப்பதற்கேற்ப விரிவடைய வேண்டும். ஒவ்வொரு நூலகமும், ஒரு நோக்கில் சொல்வதானால், ஒரு பல்கலைக் கழகமாக இயங்க வேண்டும்.''

□ துணைவேந்தரே குறிப்பிட்டது போல், டியூஷன் என்கிற வியாபாரத்தில் பேராசிரியர்களது ஓய்வு நேரம் வீணாகாதபடி கண்காணிக்க வேண்டும்.

எந்தச் சிறு நூலகமானாலும் அதன் நூலகரிடம் இத்தகைய இலட்சியத்தை நமது மக்களாட்சிச் சமுதாயம் எதிர்பார்க்கிறது.

இன்று உலகம் முழுவதுமே ஒரே கிராமமெனக் கருதும் படியான சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. நவீன மக்கள் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியால் இந்த மனோவியல் நம் நாட்டிலும் பரவிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஈடு கொடுக்கும் வகையில் நூலக இயக்கம் முடுக்கி விடப்பட வேண்டும்.

இங்கே நடைமுறையில் சாதாரணமாக ஒரு நூலகம் எப்படி இருக்கிறது?

சற்றே கற்பனை பண்ணிப் பார்ப்போம். ''மங்கலான ஒளி, அரைத் தூக்கத்தில் இருக்கும் ஊழியர், நிற்கத் திராணியற்ற, அடுக்குப் பலகைகளின் மீது நைந்து சிதறிக் கிடக்கும் நாவல்கள், விகடம் நிறைந்த பழைய வாராந்தரிகள்...'' —உலகப் புகழ் பெறற நாவலாசிரியரான **ஆர். கே. நாராயணன்** நம் நாட்டில் உள்ள பல சராசரி நூலகங்களைப் பார்த்த அனுபவத்தை இந்தச் சித்திரத்தில் எடுத்துரைத்துள்ளார். இந்நிலைமை நூலகத் தூதுவரின் சமூக உறவைக் கெடுத்து விடக்கூடும்; நாட்டிற்கு ''நன்றி பயப்பதாம் தூது'' என்கிற நம்பிக்கைக்குத் துரோகமாய்விடும்.

அரசே நிறுவியுள்ள நூலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு அதிகப்படியான பொறுப்பு இருக்கிறது. அவர்கள் சமூக

□ ஒரு பேராசிரியரின் வீட்டு டியூஷன் வகுப்பில் சேர்ந்து பயில்வதை விடவும் அவரது வீட்டு நூலகத்தைப் பயன் படுத்திக் கொள்வது உயர்வானது என்று மாணவர்களும் பெற்றோர்களும் எதிர்பார்க்கும் படியான நிலை வளர வேண்டும். இல்லையேல் என்னத்தைப் புதிசா வாசித்து என்னத்தைச் சாதித்து விடப் போகிறோம்' என்கிற விரக்தி பரவிவிடும்.

பிரக்ஞையுடன் செயற்பட வேண்டுமென இத்தேசம் எதிர் பார்க்கிறது.

நூலகச் சட்டம் 1948-இல் இயற்றப்பட்டது. அதன் அடிப்படையில் இன்று தமிழகத்தின் தலைநகரில் நூற்றுக்கும் மேற்பட்ட நூலகங்கள் இயங்குகின்றன. இங்குள்ள நூல் களில் பெரும் பகுதி பயன்படுத்தப்படாமல் இருக்கின்றதாம். 1988-இல் வெளியான ஓர் ஆய்வுக் கட்டுரை (இந்தியன் எக்ஸ்பிரஸ், மே 21, 1988) இத்தகவலைத் தந்திருக்கிறது. சென்னையிலேயே இந்நிலை. —திருக்குறள் வலியுறுத்துவது: ''தூவாத நீக்கி!''— இந்நகரிலேயே தூதுவரகங்களின் மேற் பார்வையில் உள்ள நூலகங்களுக்கு நாம் செல்லுகிற போதுதான் நூலகரையும் தூதுவரெனச் சொல்லுவது எவ்வளவு பொருத்தமானது என்பதை நன்றாக உணர முடியும்.

ஒவ்வொரு பொது நூலகமும் அதன் சுற்று வட்டாரக் கலாசாரப் பின்புலத்தை எதிரொளிக்கும் நூல்களை சேகரித்துத் தொகுக்க வேண்டும். அருங்காட்சியகம் இல்லாத வட்டாரங்கள் நிறைய இருக்கின்றன. இக்குறையைச் சரிக் கட்ட அவ்வட்டார நூலகங்கள் முயல வேண்டும். அங்கே பணியாற்றுகிற நூலகர் தம் புகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்திகளைத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

□ கல்லூரி முதல்வர் பதவிக்கான தகுதிகளில் ஒன்றாக புத்தகங்கள் வாசிப்பதிலுள்ள தீவிரமும் கவனத்தில் கொள்ள வேண்டியதே. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் 'பொது விழிப்புணர்வு' என்னும் தேர்வு ஒன்றை பட்டப் படிப்பு முதலாமாண்டுப் பாடத் திட்டத்தில் சேர்த்துள்ளது. இம்மாதிரியான தேர்வு ஒன்றினை பேராசிரியர்களுக்காகவும் நடத்தலாம். இத்தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கலாம். இதில் பெறுகிற மதிப்பெண்களின் அடிப்படையில் முதல்வராவதற்கான தகுதியையும் நிர்ணயம் செய்யலாம்.

அப்படி அவர் இல்லை என்றால் உருப்படியான சமூக உறவை அவரால் அங்கே ஊக்குவிக்க முடியாது விவசாயப் பெருங் குடிமக்கள் அதிகமாக வாழ்கின்ற ஊர்கள் ஏராளமாக இருக் கின்றன அவர்களுக்குத் தேவையான தகவல்கள நிறைந்த இதழ்களும் அங்கே வருவிக்கப்பட வேண்டும் அப்போதுதான் வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களுடைய ஆதர வையும் நூலகர் பெற முடியும். (கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் நினைவாக ஓட்டப்பிடாரத்தில் ஒரு நூலகம் இருக்கிறது. அங்கேயாவது அவர் எழுதிய நூல் களையும் அவரைப் பற்றிய நூல்களையும் திரட்டி வைத் திருக்க வேண்டாமா ?)

நூலகருக்கான தகுதிகள் நூலகத்தின் தரத்திற்கேற்பப் புதுப்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் வளர்ந்து வரும் அறிவுக்கும் மாறி வரும் ரசனைக்கும் ஏற்றபடி நூலகங்களை நிர்வகிக்க முடியும். நூலகர்கள் தாங்களாகவே தங்களுடைய தகுதிகளை உயர்த்துவதோடு, தங்களுக்கான பொருளாதார ரீதியிலான அங்கீகாரத்திற்காகக் குரல் கொடுக்கவும் வேண்டும்— தமிழ் மக்கள் 'லைப்ரரியன்' என்று 'ன்' போட்டுச் சொல்வதால் கூட நூலகருக்குரிய கௌரவம் குறைக்கப்படு வதாக நான் சில சமயம் நினைத்துச் கொள்கிறேன். 'லைப்ரரியர்' என்று சொல்லிக் கொள்வதில் மரியாதை தொனிக்கிறாதோ? – கணிதப் பேராசிரியரான **ரெங்கநாதன்** 1924-இல் பல்கலைக்கழக நூலகராகப் பதவி ஏற்ற நூலக இயக்கம் மேம்படுவதற்காகப் பிரசாரம் செய்த பிறகுதான் நூலக நிர்வாகமும் அந்தஸ்து மிக்க தேசியப் பொறுப்பு என்று

□ ஒவ்வொரு கல்லூரியிலும் பேராசிரியர்களுக்கென வாசகர் வட்டம் அமைக்கப்பட வேண்டும். அறிவு ஜீவிகளின் கவனத்திற்கு அவ்வப்போது வரவேண்டிய புத்தக வெளியீடுகள், புத்தக மதிப்பீடுகள் பற்றிய பரிவர்த்தனைகள் ஓர் ஆண்டிற்கு மூன்று தடவையாவது நடைபெற வேண்டும். இவைகளில் எல்லோருமே பங்கேற்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

கல்விமான்கள் உணரத் தொடங்கினார்கள். "புத்தகங்களை நேசிக்குமாறும் வாசிக்குமாறும்" சாதாரண மனிதர்களைத் தூண்டுவதுதான் நூலகரின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென அவர் வற்புறுத்தி வந்தார். இந்த நோக்கமே நூலகரின் சமூக உறவுக்கு அடித்தளமாகும்.

கல்வி என்றாலே பாடப் புத்தகங்களின் அடிப்படையில் தேர்விலும் வகுப்பறையிலும் பெறுகிற அனுபவம் என்றே சாதாரண மக்கள் கருதுகிறார்கள். இது ஒரு பாமரத்தனம் என்பதை அறிவொளி இயக்கம் வாயிலாக நூலகர்கள் அறிவுறுத்த வேண்டும். நூலகமும் கல்விச் சாலையே என்பதை நம் சமூகம் உணர்வதில்லை அமெரிக்க அதிபர் **ஆபிரகாம் லிங்கனைப்** போல் நூலகப் படிப்பு மூலமாக மேதைகளானவர்களை அடையாளம் காட்ட வேண்டும். நமது கல்விக் கூடங்களில் பணியாற்றும் நூலகர் கூட தாமும் அலுவலக ஊழியர் என்கிற தோரணையைத் தான் அடிக்கடி வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் முதல்வர் அல்லது தலைமையாசிரியருக்கு அடுத்த ஸ்தானம் நூலகருக்கே உரியது. நூலகரும் ஒரு பேராசிரியரே. கல்வித் துறையில் நூலகருக்கு உரிய பங்கினை நமது கல்வியாளர்கள் இன்னமும் புறக்கணிக்கிறார்கள் இன்றைய கல்விக் கலா

□ இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் மனோ புத்தகக் கண்காட்சி திருநெல்வேலியில் நடைபெற்றது. —புத்தகம் புதிய துணிமணிகள் மீது நம்மவர்களுக்கு இருக்கிற ஆர்வத்தையும் அவைகளை விலைக்கு வாங்குவதற்குச் செலவிடும் சிரமத்தையும் கொஞ்சமாவது புத்தக விஷயத்தில் வெளிப்படுத்தக் கூடாதா!—பேராசிரியர்கள் கூட அக்கண்காட்சியில் குறிப்பிடத்தக்க வகையில் அக்கறை காட்டவில்லையே என்று துணைவேந்தர் டாக்டர் வசந்தி தேவி அவர்கள் விழா மேடையிலே தமது ஆதங்கத்தைப் பகிரங்கப்படுத்தினார்கள்.

புத்தகங்களை வாங்குவதிலும் வாசிப்பதிலும் பேராசிரியர்களிடம் ஊக்கம் வளர இதோ சில யோசனைகள் ...

சாரத்தில் உடற்பயிற்சி மற்றும் சமூக சேவைத் திட்ட வளர்ச்சிக்காக அக்கறையும் விளம்பரமும் கொடுக்கப்படுகிற அளவிற்கு நூலகம் மூலமாகப் பெறுகிற படிப்பிற்கு ஊக்கம் தரப்படுவதில்லை.

''நூலகம்தான் பல்கலைக்கழகத்தின் ஆன்மா. ஆன்மாவைப் போலவே அதுவும் எளிதில் தென்படாது'' என்று சொல்வார்கள். தற்கால உயர் கல்விச் சூழ்நிலையில் அறிவை புகட்டுவதில் ஆசிரியருக்குள்ள பிடி தளர்ந்து கொண்டிருக்கிறது. மாணவ சமுதாயத்தில் 'குரு' என்று குறிப்பிட்டுச் சொல்வத் தக்க தனி நபர் முகமற்றவராகி விட்டார். பல்துறையிலும் இருக்கிற நூலாசிரியர்களின் கூட்டுச் சாதனைகளே உயர் கல்வியைப் பெறுவதற்கான சாதனங்களாகி விட்டன அறிவியக்கத்தில் நூலகங்களின் பங்கு மேன்மேலும் முக்கியமாகிக் கொண்டிருக்கிறது. பாடத் திட்டக்குழுவில் நூலகப் பயன் பாட்டிற்கு ஒரு சிறு இடமாவது

□ ஏரல் பொது நூலகம் நலிவடைந்து வருகிறது.

ஏரலில் பொது நூலகத்துக்கு டவுன் பஞ்சாயத்து வழங்க வேண்டிய நிதியை பல ஆண்டுகள் கொடுக்க வில்லை. ஆனால் பொதுமக்கள் நூலகவரியை டவுன் பஞ்சாயத்துக்கு ஒழுங்காக செலுத்தி வருகின்றனர். பொதுமக்கள் செலுத்திய நூலக வரி சுமார் ஒன்றே கால் லட்ச ரூபாய். பொது நூலகத்திற்குக் கிடைக்கவில்லை. ஏரல் டவுன் பஞ்சாயத்து நிறைவான நிதியுடையது. பற்றாக்குறை இல்லாத டவுன் பஞ்சாயத்து ஆகும். அப்படி இருந்தும் பொது நூலகத்திற்கு நிதி வழங் காமைக்கு வாசகர் வட்டம் சார்பில் கண்டனம் தெரிவிக் கப்பட்டது. தற்போது இந்த நூலகத்தில் பல பத்திரிக்கைகள் வார, மாத இதழ்கள் நிறுத்தப் பட்டுள்ளன. வாசகர்களில் சிலர் தங்கள் சொந்த செலவில் பத்திரிகைகளை வாங்கிக் கொடுக்கின்றனர். இதே நிலை நீடித்தால் விரைவில் வாசகர்கள் போராட்டம் நடத்த தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

ஒதுக்கப்பட வேண்டும். உயர் கல்வித் தேர்வுக்குரிய வினாத் தாளில் பாடத் தொடர்புடைய நூலகப் பொது அறிவுக்கென ஒரு பத்து விழுக்காடாவது சேர்க்கலாம். அப்போதுதான் மாணவர்கள் நூலகங்களை அதிகமாகப் பயன்படுத்த முன் வருவார்கள்-ஏன், ஆசிரியரும் அப்படித்தான்: நம் நாட்டில் உள்ள ஆசிரியர்களில் 75% நபர்கள் பாடப் புத்தகம் தவிர வேறு எதையும் வாசிப்பதில்லை என்று வைராக்கியமாக இருப்பதாகக் கேள்வி !

'வேடிக்கை மனிதர்'—பாரதியின் வார்த்தையில் -நிறைந்த சமூகம் இது. இந்தச் சமூகக் கலாசாரத்தில் பொழுது போக்கு மனப்பான்மையே ஆதிக்கம் செலுத்துகிறது. உல்லாசச் சோம்பேறித் தனத்தில் ஊறியவர்கள் மிகுதி. கற்பிப்பதிலும் ''வேடிக்கை''ப் பாங்கிற்கே மதிப்பு. இன்று எழுத்தறிவு பெருகுகிற வேகத்திற்கேற்ப வாசிப்பு விரிவடையவில்லை: வாசகர் எண்ணிக்கை பெருகுகிற வேகத்திற்கேற்ப வாசகர் தரம் உயரவில்லை. இதற்கெல்லாம் ஒரு முக்கிய காரணம் நம் மக்களிடம் இயல்பாக இருக்கிற பொழுதுபோக்கு மனப் பான்மையே. மேலும், எழுத்தறிவு பரவலாகுவதற்கே முன்பே நவீன ஊடகங்கள் வெகு தீவிரமாக ஊடுருயிருக்கிற சமூகம் நம்முடையதாகத்தான் இருக்கும். திரைப் படமும் தொலைக்காட்சியும் ஓர் அசுரத்தனமான பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னனிக்கு உகந்த மாதிரியிலான சேவைக்கு நூலகர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

1959-இல் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக விளங்கிய **சி.டிதேஷ்முக்** ஒரு நூலகக் கருத்தரங்கில் தெரிவித்த உண்மையை இப்போதும் நாம் புறக்கணிக்க இயலவில்லை, பொது நூலகங்களிலிருந்து எடுக்கப்பட்ட புத்தகங்களில்

□ பதிப்பாளர்களிடமிருந்தும் புத்தக விற்பனையாளர்களிட மிருந்தும் நூலகத்திற்குப் புத்தகங்களைத் திரட்டு வதற்கான விதிமுறைகள் நூலகத்தின் தேவைக்கேற்ப அவ்வப்போது முறைப்படுத்தப்பட்ட வேண்டும்.

நான்கில் மூன்று பகுதி கதைப் புத்தகங்களாம். இப்போதோ கதைகளை விடவும் பத்திரிகைகளிலுள்ள நடிகர் கிசுகிசு சமாசாரங்களும் ஆதிக்கவர்க்கத்தின் அந்தரங்க மோசடிகளும் வாசகர் கவனத்தை அதிகமாக ஈர்க்கின்றன. இம்மாதிரியான அரட்டை வாசிப்புக்கு அரசு நூலக நிதி விரயமாக வேண்டுமா? வாசகரின் ரசனை, வாசகரின் தேவை என்கிற கண்ணோட்டத்தில் வாசகரைத் திருப்திப்படுத்துவதே படிப்பகத்தின் வேலை என்று கருதக்கூடாது, வாசகர் கூட்டம் மேன்மேலும் முதிர்ச்சி பெறுவதற்காக சமூக பிரக்ஞை மிக்க அறிவு ஜீவிகளுக்கும் நூலகத் துறை நிர்வாகிகளுக்கும் இடையே அடிக்கடி பரிவர்த்தனை நிகழ வேண்டும், வாசகர் வட்டக் கருத்தரங்குகளுக்கு நூலகர்கள் ஊக்கம் தர வேண்டும். வெறும் கதைச் சுவை அல்லது காவியப் பட்டி மன்ற ரசனையிலிருந்து வாசகர் தரத்தை அறிவுலக முன்னேற்றப் போக்கிற்கு உயர்த்த வேண்டும்.

முதியோர் கல்வி, முறை சாராக் கல்வி, அஞ்சல் வழிக் கல்வி, திறந்த வெளிப் பல்கலைக் கழகம் முதலியவற்றை நாடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. முறையாக கல்விச் சாலைகளில் இருக்க வேண்டிய நூலக வசதிகள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

நெடும் தூரம் புகை வண்டிகளில் பயணிக்கும்போது சிலர் புத்தகம் ஏதாவது வாசிக்கக் கிடைக்காதா என்று எதிர் பார்ப்பார்கள். இவர்களுக்கான வாசக சாலை ஏற்பட நமது ரயில்வே நிர்வாகமும் சிறு முயற்சி எடுத்துப் பார்த் திருக்கிறது. இதைப் போலவே சுழலும் படிப்பகம், நடமாடும் நூலகம் முதலிய வாய்ப்புகளும் நூலக இயக்கத் திற்குத் துணை செய்கின்றன.

மருத்துவ விடுதிகளிலும் சிறைச் சாலைகளிலும் கூட அறிவுப் பசி மிகுந்தவர்களைச் சந்திக்கலாம். இவர்களுடனும் நூலகம் சமூக உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம். உடனடி விவரத் தேவைகளுக்கான நூலகத்தை அணுகுபவர்களில் அநேகர் வேலை வாய்ப்பு விளம்பரங்களை நாடியும்

போட்டித் தேர்வுக்கான செய்திகளைத் தேடியும் வருபவர்களே. நூலகத்தின் சமூக உறவைப் பலப்படுத்த இவர்களை நூலக அறிவியக்கத் தொண்டர்களாக்கிக் கொள்ளலாம். இவர்களோடு நட்பு கொண்டு பழக நூலகத் தூதுவர்கள் முன்வர வேண்டும்.

சமூக உறவுக்கேற்ற மனப்பாங்கு நூலகருக்கான தகுதிகளில் ஒன்றாகும். நூலகர் நிர்வாகத் தொடர்பாக அதிகாரிகளுடனும் அரசியல்வாதிகளுடனும் நல்லுறவு கொண்டிருப்பதோடு தம் வட்டாரத்தில் உள்ள பதிப்பாளர்கள், நூலாசியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் வீடுகளிலே சொந்தத்திற்காக நூலகம் வைத்திருப்பவர்கள் முதலியோருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நிர்வாக உத்திரவுகளையும் கணக்கு வழக்குகளையும் கவனிப்பதுடன் நூலகப் பணி நிறைவு பெற்றுவிடாது. ஒரு நூலகரிடம் சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்பட்டால்தான் புரவலர்கள் அந்நூலகத்திற்கு வளமை சேர்ப்பார்கள். முக்கிய நூலகங்களில் சின்னத் திரைக்கான அரங்குகள் கட்டப்பட வேண்டும். கணிப்பொறியியல் மூலமாக ஒரு சில நூலக மையங்களையாவது இணைத்துக் கொள்ளலாம். நமது மைய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் இது குறித்துத் திட்டங்களை இப்போது வகுத்துக் கொண்டிருப்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. சாதாரண சமூக, இலக்கிய விளக்கக் குறிப்புகளுக்காகக் கூட ஆய்வாளர்கள் நாடெங்கும் அலைந்து திரிய வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்கப்பட வேண்டும். பெருநகர் நூலகங்களையாவது நவீனப்படுத்தி அறிவு ஜீவிகளின் சமூக உறவுகளைப் பரவலாக்குவது நமது காலத்தின் கட்டாயமாகும். இதற்குரிய அறக்கட்டளைகள் பெருக நூலகத் தூதுவர்கள் முயல வேண்டும்.

நூலகர் தம்மைப் பற்றி நினைப்பதைக் குறைத்து நூலகத்திற்கு வருகிற வாசகரையே முக்கியமாகக் கருத வேண்டும்'' என்கிற வேண்டுகோளை 'அனைத்து நூலக இயக்கங்கள் மற்றும் நிறுவனங்களின் கூட்டமைப்பு' (ஐ. எஃ. எல். ஏ)

1992-இல் விடுத்தது. கல்விக் கொள்கை மாணவரை மையமாக்கி வரையறுக்கப் படவேண்டும் என்பதைப் போலவே நூலக வளர்ச்சியும் வாசகரை முன்னிலைப்படுத்தியே திட்டமிடப் படவேண்டும். ''இந்த நூலகத்தை நான் பயன்படுத்தியதால், இந்த நூலகர் எனக்கு வழி காட்டியாக விளக்கியதால், நான் ஐ. ஏ. எஸ். பட்டம் பெற்றேன்; ஆராய்ச்சியாளரானேன், இலக்கிய மேதையானேன், அறிவியல் நிபுணரானேன், அரசியல் விற்பன்னரானேன்'' என்று சான்றோர் நினைவு கூரும்படியாக சமுதாயப் புணியை நூலகங்களும் நூலகர்களும் வழங்க வேண்டும்.

''கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது நமது மரபுவழி நாகரிகம். **நூலகமில்லா ஊருக்குன் நுழைந்திருக்கக் கூடாது**'' என்கிற நியதி வளர நூலக இயக்கம் பிரச்சாரம் செய்ய வேண்டும். ஆன்மீக வேட்கைக்கு நம் மக்கள் திருக்கோயில்களை நாடுவதைப் போல் நூலறிவுச் சமூக உறவுக்கு நூலகங்களை அணுகுகிற பண்பாடு துளிர்க்க வேண்டுமே—போலிப் புரோகிதம் நூலகப் பணியிலும் புகுந்து விடக் கூடாது.

''ஒரு நல்ல விருந்தில் பெறுகிற மகிழ்வை நூலகம் தர வேண்டும்'' என்று வங்கக் கவிஞர் **ரவீந்திரநாத் தாகூர்** ஓர் அகில இந்திய நூலக மாநாட்டில் வேண்டிக் கொண்டார்.

''முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்'' வில் திருமகள் குடியிருப்பாள் என்கிறது வள்ளுவம்.— அறிவுக்கு விருந்தாகும நூலகப பணியல ஏறபடுகிற நிதிப் பற்றாக்குறையைத் தீர்க்க விருந்தோம்பல் பணபு ஓர் இனிய உபாயம் அல்லவா !

'நூலகம இலக்கியம்' - மாத இதழ்

ஆண்டுச் சந்தா : ரூ. 120 புரவலர் : ரூ. 1000

இவ்வெளியீட்டினைப் பெற்று நூலக இயக்க வளர்ச்சிக்கு உதவுங்கள்.

— **'நூலக ஞானி'** 6. மு. வ. தெரு, அரும்பாக்கம், சென்னை — 600 106. தொலை பேசி : 484 5034

டாக்டர் அப்துல் பாரி நூல் வெளியீட்டு விழா

சிங்கப்பூர் நசீம் பிரதர்ஸ் நிறுவன நிர்வாக இயக்குனர் டாக்டர் அப்துல் பாரி எழுதிய "பெற்றோர் இளைஞர் கையேடு" என்ற புதிய நூலின் வெளியீட்டு விழா, அவரது சொந்த ஊரான மயிலாடுதுறையில் நடந்தது.

இந்த விழா புதுமையாக நடந்தது.

மேடை கிடையாது !

மேசை கிடையாது !

நாற்காலி கிடையாது !

பூமாலை கிடையாது !

பொன்னாடை கிடையாது !

பேச்சாளர்களும் கிடையாது !

நீடூர் பெரியார் யு. எஸ். ஆர். அப்துல் மஜீது நூலை வெளியிட்டார். "ராணி வார இதழ் ஆசிரியர் அ மா. சாமி நூலை பெற்றுக் கொண்டார்

கல்லூரி மாணவ மாணவிகளின் அரட்டைக் கச்சேரி நடந்தது. நூலை விமர்சனம் செய்து கேள்வி கேட்டார்கள். அ. மா. சாமி அவற்றுக்கு விளக்கம் அளித்தார். ஒரு மணி நேரம் ஒரே சிரிப்பு. அதே நேரம் சிந்திக்கவும் வைத்தது.

நகைச்சுவை மாமன்னன் இளசை சுந்தரம் தலைமையில் பட்டி மன்றம் நடந்தது. "இளைஞர்களின் எதிர்காலம் ஆசிரியர்களிடமா? பெற்றோர்களிடமா?" என்று தலைப்பு. அப்துல் பாரியின் நூலை அடிப்படையாகக் கொண்டு விவாதம் நடந்தது. "பெற்றோர்களிடமே" என்று தலைவர் தீர்ப்புக் கூறினார்.

முனைவர் அ. அய்யூப் விழா ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

வாசகர் திருவிழா
புத்தக மழையில் சென்னை

ஆகஸ்டில் — மாணவர் புத்தகக் கண்காட்சி
நவம்பரில் — தேசிய நூலக நூலக, புத்தக வார விழா—
டிசம்பரில் — பதிப்பாளர், விற்பனையாளர் புத்தகக் கண் காட்சி.

ஆண்டு முழுவதும் — தனியார் கலியாண சத்திரங்களில் 10% தள்ளுபடியில் விற்பனை

தலைப்புகளில்

வாசகர் திருவிழா சுவடுகள்

- ☐ 'டிசம்பர் சீசனி'ல் இன்னொரு திருவிழா.
- ☐ புத்தகக் கண்காட்சியா? கடை வீதியா— தம்பி சீனிவாசனின் கட்டுரை. தினமணி நாளிதழில்
- ☐ தமிழ்ப் புத்தகங்கள் 1995... வெளி வருவது எக்காலம்? என ஏங்குகிறார்! கட்டுரையாளர்.
- ☐ புத்தக வெளியிட்டுப் பயிற்சி துவங்கத் திட்டம்!
- ☐ தலித் இலக்கியம் என்பதே தவறு : திலகவதி IPS.
- ☐ கவியரங்க முறை : அப்துல் ரகுமான் எதிர்ப்பு
- ☐ இலக்கியத்தை ஆராய்வது எப்படி? பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம்.
- ☐ எழுத்தாளர் சுஜாதாவின் திருக்குறள் உரை நூல் வெளியிடப்பட்டது.
- ☐ 1994— 36 தமிழ் நூல்களுக்கு தமிழக அரசு பரிசு. பட்டி.

☐ ஞான பாரதி அறக்கட்டளை விருது — கார்டூனிஸ்ட் கேசவ், கல்கி கே. ராஜேந்திரன் ஆகியோருக்கு நாரத கான சபா வழங்கியது.

☐ 'இன்டர் நெட்' இணைப்பில் தமிழ் – சிங்கப்பூர் பேராசிரியம் நா. கோவிந்தசாமி.

☐ ஜான் சாமுவேலுக்கு விஜயரத்ன விருது.

☐ 1995 சாகித்ய அகாதமி விருது பெற்ற **பிரபஞ்சன் கதைகளால் உலகை வெல்லாம்** என்கிறார்.

☐ பிரபஞ்சனுக்கு வீட்டு வசதி கொடு— தி. க. சிவசங்கரன் — ஆசிரியருக்கு கடிதம். தினமணி ஞாயிறு. 11—1995

புத்தக உலகம் எதிர்பார்ப்புகள் 1996

☐ அமுதசுரபி இலக்கியப் பரிசளிப்பு விழா

☐ மூவேந்தர் முத்தமிழ் மன்றம்-– நிழல் கோபுரம் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு.

☐ சாகித்ய அகாதமி விருது பெற்ற தமிழ்ப் படைப் பாளிகள்..... அன்று முதல் இன்று வரை (1995)—பட்டி இணைப்பு. காண்க : தினமணி

☐ ஊருக்கு ஒருவர் கூட இல்லையா? பொள்ளாச்சி நசனின் வருத்தம். தினமணி

☐ Dr. அப்பாஸ் இப்ராகிமின் சங்கப் பலகை— உதயம் !

☐ நூலகம் இலக்கியம் மாத இதழ் செப்டம்பர் முதல் தொடர்ந்து வெளிவருகிறது. இது ஐந்தாவது இதழ்.
1—1996



பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, கவிமணி நிலையம் 61, பாலகிருஷ்ண நாயக்கர் தெரு, மேலை மாம்பலம் சென்னை—600 033.

கல்விக்கு— நூலகம் உறுதுணை, நூலறிவு பெற நூலகம் நிலைக்களம்.

நூலகம் என்ற பெயரில் (1964—1972) முன் குயிலன் (1964—69) திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி தம்பதியளர் (1969—72) பதிப்பித்து, வெளிவந்த இதழுக்கு மாற்றாக இலக்கியம் என்பது இணைக்கப்பட்டது போலும். இலக்கியம் மட்டுமா? எல்லாப் பொருளும் வந்து சேரும் பொது நிலையமாயிற்றே.

நூலகம் இதழ் வெளியீடு மிக மிக இன்றியமையாதது. நூல்கள்—பதிப்பகங்கள் முதலிய எல்லா செய்திகளும் வந்துள்ளன. புதிது புதிதாக வரும் நூல்களின் அறிமுகம் நூல் வாசிப்பார்க்கு அவசியம் வேண்டும். நூல் மதிப்புரைகளும் **நடுநிலையில்** வெளிவருவது **சிறப்பாகும்**. உங்கள் முயற்சிக்கு அன்பர் பலர் உதவ முன் வந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

உரிய முறையில் **நூலகம்** வெளிவருவதாக. **இவ்விதழ் நாட்டிற்குப் பெரும் பயன்** விளைப்பது. உங்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

ஓவியர் AYKAN, சென்னை—1

நூலகம் பற்றி மாதா மாதம் எழுத என்ன இருக்கிறது **என்றே** நினைத்தேன்.

பொது மக்கள் அறிய இவ்வளவு தகவல்களா...

நூலகம் சுரங்கமாகவல்லவா திகழ்கிறது. பயனுடையதுதான்.

(ஆசிரியருடன் உரையாடலில் குறிப்பிட்டது)

புதிய வரவு

இனிய குடும்பத்திற்கு– பெண்களுக்கு பயனுள்ள போசனைகள்

ராமதிலகம்; அரசு மகாலட்சுமி; டாக்டர் ராஜேஸ்வரி ஆகஸ்டு, 1995 ப. 184. ரூ. 34. கலைவாணி புத்தகாலயம், 2 சிவஞானம் ரோடு பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை—600017. குடும்பப் பாங்கிற்குத் தேவையான சமையல் கலை, ஆன்மீகம், மருத்துவம், நிர்வாகக் கலை முதலிய பல்வேறு துறைகளையும் சுருங்கச் சொல்லி கலைக் களஞ்சியமாக விளங்குகிறது. பெண்கள் அனைவருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக விளங்கும்.

எல்லா நோய்களுக்கும் இயற்கை மருத்துவம்

டாக்டர் இரத்தின சண்முகனார். ஆகஸ்டு 1995 ப. 176 ரூ. 33. இது ஒரு கலைவாணி வெளியீடு K. 483 மனிதர்கள், தங்கள் உடம்புக்குப் பொருந்தும் உணவை, அளவுடன் உண்டால் உயிரும் உடலில் இணைந்திருக்கும். உயிர்க்கு இடையூறாக எந்த நோயும் வராது. உண்ட உணவு செரித்த பின், உடலுக்கேற்ற உணவை அளவாக கால மறிந்து உண்டால், நோயே வராது. ஒரு சமயம் வந்தாலும் உணவு முறைகள் மூலமே விரைவில் குணம் பெறலாம். என்ன நோய் என்பதையும், நோயின் காரணத்தையும் கண்டு தெளிந்து, உடலுக்கு ஊறு நேரா வண்ணம் நோயை அகற்றவே, எல்லா நோய்களுக்கும் இயற்கை மருத்துவம் என்பதை சிறப்பாக விளக்கும் நூல் இது.

வானொலியில் இன்று ஒரு தகவல் பாகம்—14

தென்கச்சி கோ. சுவாமி நாதன், டிசம்பர், 1995 ப 128. ரூ. 22 கலைவாணி வெளியீடு K. 483 காற்றுக்கும் உருவம்... தென் கச்சியார் தொடாத துறையே இல்லை, வெற்றிக்குக் காரணம். தென் கச்சியார் ஒரு கருத்துக் களஞ்சியம். இப்படி பலரும் பெருமை பட பாராட்டும் பயனுள்ள நூல் தமிழர்கள் அனைவரும் **வாங்கிப்** படிக்க வேண்டிய புத்தகம்.

மணி வாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரிமுனை சென்னை—600108. தொலை பேசி : 56 10 39

1. **சித்த நெறி** டாக்டர் ஏ. ஆர். சாரங்கபாணி நவம்பர், 1995 மணிவாசகர் வெளியீடு எண். 353 பக். 112. ரூ. 16. காலத்தை வென்ற ஞானச் செல்வம் வாழ்க்கை நுட்பங்களைப் பற்றிச் சித்தநெறி என்ன கூறுகிறது என்பதை இந்நூல் விளக்குகிறது.

2. விவேக சிந்தாமணி பாகங்கள் 1&2 (உரையுடன்) புலவர் அ. மாணிக்கம் மறு பதிப்பு. அக்டோபர் 1995. பக். 128. ரூ. 16. காலந் தோறும் நீதி நூல்கள் பதிப்பாளர், பேராசிரியர் தமிழவேள் டாக்டர் ச. மெய்யப்பன் முன்னுரைகள் — சிறப்பான பிரசித்தி பெற்ற முன்னுரைகளாகும், விரைவில் நூலாக வெளிவர வேண்டும்.

3. CHIDAMBARAM— Dr S. MEYYAPPAN Revised edition. November, 1995. Pages. 88, Rs 20. Sthala Puranam in English This hand book is very useful for pilgrims— Devotees—and all Hindus and Tourists.

4. Temples of South India. (Stones of Eloquence). V. Narayanaswami October, 1995. Pages. 142. Rs. 25. This book will kindle an interest in the heart of the reader to visit them, then the purpose of this book will be better served.

நூலக இயக்க வளர்ச்சிக்கு உதவிய... கோடீஸ்வர கொடை வள்ளல்

—கோ. ஜகதீசன்

மாவட்டமைய நூலகர்,
தேவநேயப்பாவாணர்
நூலகம், அண்ணாசாலை
சென்னை— 600 002.

அமெரிக்கக் கொடையாளி ஆன்ட்ரு கார்னீகியின் உதவியாலேயே முதலில் கிராமாந்தரப் புத்தகாலய இயக்கம் பிரட்டனின் பரவத்தொடங்கியது. தனவான்கள் ஏராளமாக நன் கொடைகள் அளிக்கவே துரிதமாக முன்னேறின.

பாரதத்தின் பல மாநிலங்களிலும் பல நூலகக் கொடை வள்ளல்கள் உள்ளனர்.

தமிழகத்தில் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன், கோவை மாவட்ட சிறுமுகை எஸ். இராமச்சந்திர ஐயர், நூலகர் கல்யாண சுந்தரம், டாக்டர் நல்லிகுப்புசாமி செட்டியார்... இவர்களை பற்றி **நூலகக்கொடை வள்ளல்கள் தொடரில்** கட்டுரைகள் படங்களுடன் வெளிவரும்.

—ஆசிரியர்

''தொட்டனைத் தூறும்
மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''

என்றார் வள்ளுப் பெருந்தகை அங்ஙனம் அறிவு ஊறுவதற்குப் பெரிதும் துணை புரிவது இன்று நாம் காணும் நூலகங்கள் என்று கூறலாம். அத்தகு நூலகங்கள் தோன்ற உலகிலேயே அதிக அளவு அள்ளிக் கொடுத்த வள்ளல் ஆன்ட்ரூ கார்னெகி ஆவார்.

''எதையும் சீர் தூக்கிப் பார்த்து சிந்திக்க இயலாதவன்

ஒரு முட்டாள்; சிந்திக்காதவன் ஒரு மதப்பித்தன்; சிந்திக்க அஞ்சுகிறவன் ஓர் அடிமை''

என்ற வாக்கியங்கள் ஒரு பொது நூலகத்தில் கண்ணுற்ற இளம் ஆண்ட்ரூ கார்னெகியின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தன. அதன் விளைவு, பிற்காலத்தில் கோடீஸ்வர செல்வந்தனாக ஆனபிறகு, தான் ஈட்டிய செல்வங்களில் பெரும்பகுதியை பொது நூலகங்கள் திறப்பதிலும். பல்கலைக்கழகங்களுக்கு உதவுவது போன்ற திருத்தொண்டில் ஈடுபட்டார்.

ஸ்காட்லாந்து நாட்டில் டம்பர்மிலைன் என்னும் ஊரில் நெசவாளியின் மகனாகப் பிறந்த ஆண்ட்ரூ கார்னெகி, தம் 12 ஆம் வயதில் வறுமை மிகவாட்டவே தம் குடும்பத்தாருடன், பிழைப்புத்தேடி, அமெரிக்கா விற்கு வந்தார். அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தும கூட வறுமை தொடர்ந்தது.

தந்தை நெசவுத் தொழில் செய்தும், தாய் செருப்பு தைத்தும் சம்பாதித்து குடும்பத்துக்குப் போதாததால் கார்னெகி பள்ளிபபடிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு. பஞ்சாலை ஒன்றிற்கு வேலைக்குச் சென்றான்.

பஞ்சாலையில் வேலை செய்ய விருப்பமில்லாமல். பிட்ஸ்பர்கில். புருக்ஸ் என்பவரிடம் தந்தி பையனாகப் பணி ஏற்றார்.

இந்தச் சமயத்தில் கர்னல் ஆண்டர்ஸன் என்பவர் தம் நூல் நிலையத்திலிருந்து நூல்களை இளைஞர்கள் படிக்க இரவல் கொடுத்தார். அவருடைய உதவியை முற்றிலும் பயன்படுத்திக் கொண்டு அவரிடமிருந்து அனைத்து நூல்களையும் கார்னெகி படித்து முடித்தார். இதனால் இதழ்களுக்குக் கட்டுரைகள் எழுதவும், சொற்பொழிவுகள் செய்யும் ஆற்றல் பெற்றார். இதனால் அவர் பெயர் பரவியது.

பின்னர் ஸ்காட் என்பவருடன் நட்புக் கொண்டு பென்சில்வேனியா புகை வண்டிச்சசாலையில் தந்தி இயக்கும் பணியில் ஈடுபட்டார். அயராது உழைப்பால் கார்னெகி, பீட்ஸ்பர்க் பகுதியின்தலைமை அதிகாரியானார். இதில் பணியாற்றிய போது தான், சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து மாடி வீடொன்றை விலைக்கு வாங்கினார். பின்பு ஆடம்ஸ் எக்ஸ் பிரஸ் கம்பெனியில் பங்குகள் வாங்கினார், உட்ரோம் என்பவரின் ரெயில் வண்டி செய்யும் தொழிற்சாலையின் பங்காளியாக ஆனார்,

கார்னெகி தம் 30 ஆவது வயதில் இரும்புத் தொழிற்

சாலை ஒன்றை நிறுவினர். அதில் பெரும் பொருள் ஈட்டினார். 12.3 1991 இல் தம் தொழிலிருந்து ஓய்வுபெற்றார்.

தன் தாய் உயிரோடிருக்கும் வரையில் திருமணம் செய்து கொள்ளாத கார்னெகி அவர்கள் தம் 51 ஆவது வயதில் ஒயிட்பீல்ட் என்ற மங்கையை மணந்தார்.

கார்னெகி, தம் சொந்த ஊரான டம்பர் மிலனுக்கு பெரும் பொருள் நன்கொடை வழங்கினார். அங்கு நூல் நிலையத்திற்கு கட்டிட வேலையைத் துவக்கி வைக்க கேட்டுக் கொண்டபோது, தம் தாய் மூலம் கட்டிடப்பணியைத் அவ்வூர்மக்கள் கர்னெகியை துவக்கி வைக்கச் செய்தது, தம் தாயிடம் கொண்டுள்ள பெரு மதிப்பை வெளிக்காட்டினார்.

ஆண்ட்ரு கார்னெகியின் சீரிய நோக்கம் என்ன வென்றால், பொது மக்களின் மூளையில் அறிவைப் புகுத்தி. அவர்களை ஒழுங்காகச் சிந்தனை செய்பவர்களாக ஆக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. எனவே, ஆண்கள் பெண்கள், சிறுவர்கள், அனை வருடைய கைகளில் நல்ல பயன் உள்ள நூல்கள் கிடைக் கும் வண்ணம் உலகம் முழு வதும் நூலகங்கள் திறந்து செயல்படச் செய்தார்.

கார்னெகி அறம் செய்த முறை மிகவும் புதுமையானது. அவர் மக்களுக்கு நூல்களை வழங்கவில்லை. நூல்கள் அளிப்பது அரசின் கடமை என்றார், அந்நூல்களைப் பாதுகாப்பாக வைக்க நூல் நிலையக்கட்டிடங்கள் கட்டிக் கொடுத்தார்.

நூல் நிலையம் அமைக்க விரும்புவோர் முதலில் கார்னெகியிடம் மனு செய்து கொள்ள வேண்டும். உடனே கார்னெகி அலுவலகத்தினர் பல வினாக்கள் கொண்ட அச்சடித்த தாள் ஒன்றை மனு செய்து கொண்டவர்களுக்கு அனுப்புவர். அதில் அவ்வூரின் மக்கள் தொகை எவ்வளவு? ஏற்கெனவே அங்கு பொது நூலகம் உண்டா? நூலகம் கட்டத் தகுந்த இடம் உண்டா? கட்டிடம் முடித்ததும், நிர்வாகம் செய்ய அவர்கள் எவ்வளவு செலவு செய்யத் தயாராக உள்ளனர்? என்பன போன்ற வினாக்கள் இருக்கும். தகுந்த பதில் கிடைத்ததும், உடனே நூல் நிலையக்கட்டடம் வரை ஆம்பிக்கும்.

நன்றி மறவாத உள்ளம் கொண்ட கார்னெகி அவர்கள் தன்னைக் கோடீஸ் வரனாக உயர்த்திய பீட்ஸ்பர்க் நகருக்கு மிகப்பெரிய நூல் நிலையம் அமைக்க முதலில் 25,000 டாலர் தருவதாக கூறி. அதை நிர்வாகிக்கும் பொறுப்பை பிட்ஸ்பர்க் நகர சபை ஏற்க வேண்டும் என்று அந்தகர

மேயருக்கு கடிதம் எழுதினார். கார்னெகி நிபந்தனையை, பிட்ஸ்பரக் நகரசபையினர் ஏற்றுக் கொள்ள வில்லை. இதனை அறிந்த அல்லிகன் நகரத்தினர், கார்னெகி நன்கொடையைத் தம் நகருக்கு கேட்டுப் பெற்று பயனடைந் தனர் அல்லிகன் நகரில் அமைந்த அந்நூலகத்தை அன்றய ஜானதிபதி பெருஞ்சமின் ஹார்ஸன் அவர் கள் திறந்து வைத்தார்.

இதைக்கண்ட பிட்ஸ்பர்க் நகரசாபையினர் தம் தவறை உணர்ந்தனர். அவர்களாகவே கார்னெகியிடம் தங்கள் ஊரில் நூலகம் அமைக்க உதவுமாறு வேண்டிய ஒரு தூதுக்குழுவை அனுப்பினர். 'இல்லை' என்று மறுமொழி கூறினார் கார்னெகி. அதிர்ச்சியடைந் தனர் தூதுக்குழுவினர். கார்னெகி புன்புறுவலுன் ''இல்லை பிட்ஸ்சர்க்கு 250,00 டாலர் போதாது, நான்கு மடங்காக அதாவது,

பத்து லட்சம் டாலராகத் தருகிறேன் என்றார். என்னே! கார்னெகியின் கொடை உள்ளம்.

ஆண்ட்ரூ கார்னெகியின் சிரிய நோக்கம் ''பொது மக்களின் மூளையில் அறிவைப் புகுத்தி, அவர்களை ஒழுங் காகச் சிந்தனை செய்பவர் களாக ஆக்க வேண்டும் என்ப தாகவே இருந்தது.

ஆண்ட்ரூ கார்னெகி தன் நண்பர் ஒருவருக்கு எழுதிய மடலில் ''நான் நாளொன் றுக்குஇரண்டு அல்லது மூன்று நூலகங்கள் வீதம் நன்கொடை அளித்து வருகிறேன்'' என்று உள்ளம் நிறைந்த உவகையுடன் எழுதியுள்ளார்.

இவ்வாறாக பதினைந்து ஆண்டுகளுக்குள் ஆண்ட்ரூ கார்னெகி அவர்கள் 265, நூலகங்கள் அமெரிக்காவில் மட்டும் நிறுவினார். ஆனால் புகழுக்கு அடிமையாகாத அவர், ஒன்றிற்கு கூட தம் பெயர் சூட்டிக் கொள்ள வில்லை.

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மரிஷீயஸ், ஸ்காட்லாந்து, ஆஸ்திரே லியா, நியுசிலாந்து ஆகிய நாடுகளில் ஆறுகோடி டாலர் கள் சிலவழிந்து 2811 நூல கங்கள் நிறுவி மக்கள் அறிவு பெற வழிவகுத்தார்.

பேராசிரியர் ஆக்டன்பிரபு அவர்களின் புகழ்பெற்ற நூல் நிலையம் அவரது கடன் தொல்லைக் காரணமாக ஏலத் திற்கு வந்தது. இச்செய்தி கேள்விப்பட்ட கார்னெகி, அந்நூல் நிலையத்தை 9000 பவுண்டுக்கு விலைக்கு வாங்கி, ஆக்டன் பிரபு அவர்களிடமே ஒப்படைத்தார். ஆக்டன் பிரபு விற்கு பிறகு, இந் நூல் நிலையம் கார்னெகி நண்பர்

மார்லியன் வசம் வந்தது. மார்லி தம் முதுமையில் அதை கேம்பிரிட்ஜ், டல்கலைக்கழக நூல் நிலையத்துடன் இணைத்தார். கார்னெகி, ஆக்டன் பிரபுவிற்கு உதவிய இச்செய்தியை தன்னுடைய நண்பர்களிடமோ, ஏன் தன் மனைவியிடமோ கூட கூற வில்லை. பன்னிரண்டு ஆண்டு களுக்குப் பின், செய்தித் தாள் களில் வெளிவந்த பின்னரே மக்கள் உணர்ந்து ஆச்சரியப் பட்டனர். தன்னடக்கம் கார்னெகியின் பிறவிக் குணம் என்று சொன்னால் அது மிகை யாகாது.

'இசை என்பது இறை வனின் இன்ப மொழி' என்ற கன்ப்யூஷியன் சொற்களை அடிக்கடி கூறி வந்தார் கார்னெகி, எனவே, இசைக் கருவி வேண்டும் என்று கேட்கும் மாதா கோவில்களுக்கு எல்லாம் வாரி வழங்கினார். 70 லட்சம் டாலர் செலவில் 8000 இசைக் கருவிகள் வாங்கி நாடு

நூலகம் சென்றால் 8 கோடி டாலர் சம்பாதிக்கலாம்!

வாடிகன் நூல் நிலையத்தில் மாணவன் ஒருவன், பிரபலமா காத தத்துவ ஞானி ஒருவரின் நூல்களைப் படித்துக் கொண்டி ருந்தான். மிகப்பெரிய ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டி ருந்த போது, அதற்குள், அந்த தத்துவ ஞானி கையெழுத்திட்ட ஒரு காகிதம் அவன் கண்ணில் பட்டது. அதில், 'இந்த காகிதத்தை பார்க்கின்றவர் புரோபேட் கோர்ட்டுக்கு சென்று கோப்பு எண் 162/ ரோமபுரி, பிப்ரவரி 15, 1784ஐ பார்க்கவும்.' என்று எழுதப்பட்டிருந்தது. அந்த மாணவன் அப்படியே செய்தான். அந்தத் தத்துவ ஞானி தன்னுடைய சொத்து முழு வதையும் அவருடைய புத்தகத்தில் அந்த குறிப்பிட்ட பகுதி வரை பொறுமையாக படிக்கிறவருக்கு சேரவேண்டும் என்று உயில் எழுதி வைத்திருந்தார். 170 வருட வட்டியும் சேர்த்து அந்தப்பணம் 360 கோடி ரூபாய் மதிப்பை பெற்றிருந்தது.

—'நிறைவான வாழ்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்' எல். பாபு.

முழுவதும் வழங்கினார். 2 கோடி டாலர்களைக் கல்லூரி களில் படிக்கும் ஏழை மாண வர்கள் பயனடைய உதவினார் ஆங்கிலச் சொற்கள், உச்சரிப் புக்குத் தக்கபடி அமைய வேண்டும் என்று கருதி, எழுத் துச் சீர்திருத்தத திற்காக 280,000 டாலர் நன்கொடை ஈந்தார். முதுமையடைந்தவர் களுக்கும், ஏழைகளுக்கும் வறுமையுற்ற புலவர்கள், அறிஞர்கள், அரசியல் வாதிகள் ஆகியோர்களுக்கும் மாத ஊதி யம்பெற நிதியுதவி செய்தார். கார்னெகி தம் வாழ்நாளில் சுமார் 324, 657, 399 டாலர்கள் அறச்செயல்களுக்கு செலவ செய்துள்ளார். இதில் பெரும் பகுதி நூலகங்களுக்கு என்பது வெள்ளிடைமலை.

''மனி தரெலாம் அன்புநெறி
காண்பதற்கும்
மனோ பாவம் வானைப்
போல் விரிவடைந்து
தனி மனிதத் தத்துவம்
இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்ப
துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர்
எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்
சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு
வேண்டில்
புத்தக சாலை வேண்டும்
நாட்டில் யாண்டும்''

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இவர் கனவை முன்னரே நனவாக்கிய பெருந் தகை அமெரிக்க நூலக வள்ளல் கார்னெகி அவர்கள்.

மக்களின் அறிவுக்கண் திறக்கப்பாடுபட்ட இவ்வள்ளல் தம் 84ஆம் வயதில் 1919 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் நாள் இயற்கை எய்தினார்.

நூலக வள்ளல் ஆண்ட்ரு கார்னேகி, இன்றும் நூலகங் களில் வாழ்ந்து கொண்டு நம்மையும் சிந்திக்க வைத்து வருகிறார்!

---

100 ரூபாய் பரிசு பெற்றேன்

பொது நூலகத் துறை நூலகவியல் பயிற்சி வகுப்பில் (C.L.I.Sc,) 4.12.1995இல் நூலகம் இதழுக்கு கோலன் பகுப்பு பெண்ணை 2 M 4411, N 95 என குறிப்பிட்டு, நூறை பரிசாக பெற்றேன்.

இப்பரிசு எனக்குமட்டுமின்றி, எங்கள் நூலகத் துறைக்கே பெருமை சேர்த்து, மகிழ்கிறேன்.

இல. இராம கிருஷ்ணன், நூலகக் II-ம் நிலை கிளை நூலகம் தளவாய் புரம், காமராஜர் மாவட்டம்.

நல்ல புத்தகங்கள்; நல்ல நண்பர்கள்

பி. வி. கிரி

ஒருவனுடைய கையெழுத்தைக் கொண்டே அவன் எப்படிப்பட்டவன் என்பதை தெரிந்து கொள்ளலாம். அதைப் போல, ஒருவனுடைய புத்தகத்தைக் கொண்டே அவன் எப்படிப் பட்டவன் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

புத்தகத்தை வாங்குகிறோம் அது பாடப் புத்தகமாக இருந்தாலும் சரி வேறு புத்தகமாக இருந்தாலும் சரி, அதை ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரிய வேண்டும்.

சிலருடைய புத்தகத்தைப் பார்த்தால் அழுக்குப் படிந்தும். புத்தகத்தின் முனைகள் மடிந்தும் காணப்படும். அது மட்டுமல்ல, கண்ட இடங்களில் தன் பெயர்களை எழுதியும் வைத்திருப்பார்கள். புத்தகம் முழுவதும் முக்கியமான பாகங்களைக் கோடிட்டும் குறித்தும் வைத்திருப்பார்கள்.

'தனித் தமிழின் தந்தை' மறைமலையடிகளார் பெயரில் அமைந்த மறைமலையடிகள் கலைமன்றம், சென்னை பல்லாவரத்தில் உள்ளது. இங்குள்ள நூலகத்தில் மறைமலையடிகளார் பயன்படுத்திய ஏராளமான நூல்களும் உள்ளன. அவ்வளவு நூல்களும் அழகாக அட்டை போடப்பட்டு ஒழுங்காக வைக்கப்பட்டுள்ளன.

அந்த நூல்களுக்கெல்லாம் தன் கையாலேயே அட்டை போட்டு கொஞ்சங்கூட முனை மழுங்காமல் படித்திருக்கிறார், பயன் படுத்தியிருக்கிறார் மறை மலையடிகளார்.

நூல்களை நம் கண்களைப் போலப் பாதுகாக்க வேண்டும்.

வாங்கியதும் அட்டைப் போட வேண்டும்.

புத்தகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் தன்பெயரை எழுதினால் போதும்.

முக்கிய பகுதிகளைப் பேனா வால் கோடு போட்டுக் குறிப்பது கூடாது. அப்படிச் செய்வது புத்தகத்தின் அழகையே கெடுத்து விடும். புத்தகத்தில் பக்கங்களை ஒவ்வொன்றாக எடுக்கும்போது நாசூக்காக எடுக்க வேண்டும்: அவசரப் பட்டு 'மட மட'வென்று பக்கங்களைத் தள்ளக்கூடாது. ஏடு

எடுக்க வரவில்லை என்பதற்காக எச்சில் தொட்டு எடுப்பது அநாகரிகம்.

புத்தகத்தைக் கண்ட இடங்களில் போடக்கூடாது. அதை அழுக்குப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகமாக யாருக்கும் இரவல் கொடுக்கக்கூடாது (பொதுவாகப் புத்தகத்தை இரவல் கொடுக்கக்கூடாது என்பார்கள்.

மாணவர்களாக இருந்தாலும் சரி, வேலையில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, நல்ல தரமான, அறிவுக்குப் பயன்படும்படியான நூல்களைப் படிக்க வேண்டும். அதுவும் நூல்களை விலை கொடுத்து வாங்கும் பழக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.

நூல்களை அட்டைபோட்டு பொருள் வாரியாக அலமாரியில் வைக்க வேண்டும். பிறகு பாருங்கள், ஒருகுட்டி நூலகமே உங்கள் வீட்டில் காட்சியளிக்கும்!

நூலகங்களுக்குச் செல்பவர்கள், நூலகங்களில் உறுப்பினர்களாகிப் புத்தகங்களை வீட்டுக்குக் கொண்டு வருபவர்கள் எல்லாருமே அவற்றை வாங்கும் போதும். திருப்பித் தரும்போதும் பத்திரமாக 'உள்ளது உள்ள படி' கொடுக்க வேண்டும். கண்ட இடங்களில் வைத்து விட்டுத் தேடுவது, குழந்தைகள் கண்ணில் படும்படி வைப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் அதே நேரத்தில் நூல்களைக் குறித்த காலத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் தவறக் கூடாது.

நூலக நூல்களைத் தம் சொந்தப்புத்தகம் போலவே பாவிக்க வேண்டும், யார் பார்க்கப் போகிறார்கள், கேட்கப் போகிறார்கள் என்று அதில் கிறுக்குவது, தம் கருத்தை எழுதி வைப்பது, நல்ல படங்களாக

அஞ்சலி

நூலக உணர்வு மிக்கத் தலைவர் மா.பொ.சி.

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராக இருந்து, நூலக இயக்க வளர்ச்சிக்கும், மாநாடுகள் நடத்த வரவேற்புக்குழுத்தலைவராகவும் இருந்து, தமிழகத்தில் பொது நூலகப்பணி சிறக்க பாடுபட்ட சிலம்புச் செல்வர் மா.பொ.சி. மறைவு, நூலக உலகுக்கு பேரிழப்பாகும். கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது நூலகம் இலக்கியம்.

—ஆசிரியர் நூலகம் இலக்கியம்

இருந்தால் கிழித்துக் கொள்வது போன்ற இழி செயல்களை அடியோடு வெறுக்க வேண்டும், கைவிட வேண்டும்

ஒரு பெரிய நூலகத்தில், ஒரு நூலை வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் பார்த்த போது அதில் நடுவில் பல பக்கங்கள் இல்லாதது தெரிந்தது. இன்ன பக்கத்திலிருந்து இன்ன பக்கம் வரை இல்லை என்ற குறிப்பும் முன் பக்கத்தில் பென்சிலால் எழுதப்பட்டிருந்தது

பொதுவாக எந்தப்புத்தக மாக இருந்தாலும் சரி, அதை நம் சொந்தப் புத்தகமாகப் பாவித்துப் பாதுகாக்கின்ற பக் குவம் நமக்கு வர வேண்டும்,

'நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்' என்பார்கள். அந்த நல்ல நண்பர்களை நாம் 'துன்பு றுத்த. வேண்டாம்!

பாரதி இலக்கியச் செல்வர்

டாக்டர். பூவண்ணனுக்கு புதிய விருது.

கடந்த **47 ஆண்டுகளாக இலக்கியத் தொண்டாற்றிவயவரும், 150 நூல்கள் எழுதியவருவான டாக்டர் பூவண்ணன்** பல விருது களைப் பெற்றுள்ளார். பாலர் இலக்கிய ஜோதி, குழந்தை இலக்கிய மாமணி, குழந்தைக் கவிஞர் விருது, குழந்தை இலக்கிய மாமன்னன் மழலைக்கவிஞர், இலக்கியச்செம்மல், செந்தமிழ்ச் சிற்பி முதலிய பட்டங்களை முன்னரே பெற்றவர். இவருக்கு அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் பாரதி இலக்கியச் செல்வர்'' என்னும் பட்டம் வழங் கியது.

கடந்த டிசம்பர் 10ஆம் தேதி, பாரதி பிறந்த மண்ணான **எட்டையா புரத்தில்** மேற்படி எழுத்தாளர் சங்கம் **பாரதியின் 114ஆம் பிறந்த நான் விழாவைச்** சிறப்பாகக் கொண்டாடியது.

இவ்விழாவில் டாக்டர் பூவண்ணனுக்கு இந்தப் பட்டத்தை, டாக்டர் விக்கிரமன் தலைமையில், ராம்காஷ்யம் நிறுவனங்களின் தலைவர் வெங்கட்ரமணி வழங்கினார்.

சென்ற ஆண்டில் கோவை பாரதி இலக்கியப்பேரவை இவருக்கு ''**பாரதிப்** பதக்கம்'' வழங்கியது நினைவு கூரத் தக்கது,

உலக மொழி நூல்களை தமிழுக்குத் தந்த முதல் பதிப்பாளர்

''கீ'' 'சுபமங்களா'

செப்டம்பர்-1948 காதம்பரி மாத இதழில் இடம் பெற்ற சுட்டுரையே இந்த 'சென்ற தலைமுறை' பகுதியில் இடம் பெற்றுள்ளது. 'காதம்பரி' காந்தி மறைந்த காலத்தில் மலர்ந்துள்ளது. முதல் இதழின் உள் அட்டையில் அவரது அற்புத மான படம் ஒன்று இடம் பெற்றிருக்கிறது. தனிப்பிரதி எட்டு அணா (50 காசு) வருட சந்தா ரூ. 6/- ஒவ்வொரு இதழிலும் ஒரு முழு நாவல். அதற்கு ஒரு பவுன் சன்மானம். சில காதம்பரி இதழ்கள் காலம் தவறி மலர்ந்துள்ளன. இப்படி காதம்பரி பற்றி நிறையச் சொல்லலாம். இதனைப் பதிப்பித்தவர்கள் ஏ. கே. கோபாலன், ஏ.கே ஜெயராமன் சகோதரர்கள். இன்றைக்கும் பதிப்பாளராகவே இருக்கிற ஏ.கே. கோபாலனை அவரது சாலிக்கிராமம் இல்லத்தில் சந்தித்தோம்.

''மேல்குமாரமங்கலம் என்கிற கிராமத்தில் பதினாறு வயது வரை விவசாயம் அறுநூறு எழுநூறு காணி நிலத்தை விட்டு விட்டு பங்காளிகள் தகராறில் எங்கள் குடும்பம் பட்டணத்துக்கு வந்தது. 1937-ல் ஹோட்டல்களில் வேலை செய்து கொண்டே ச. சு. சங்கரலிங்க கவிராயர் என்பவரிடம் நாடகம் பயின்றேன். பாகவதம் செய்யவும் அறிந்தேன்.

''எனது 23-வது வயதில் மணிக்கொடி பிரசுரங்களை விற்க தெற்கே திருவையாறு வரை புத்தகக் கட்டுகளைத் தூக்கிச் சுமந்தேன்.''

''முதலில் புத்தகங்களை வாங்கி வியாபாரம் செய்தேன். அந்தக்கால பிரபலங்களின் விடுகளுக்குப் போய் புத்தகங்கள் விற்பேன். அப்புறம் கடை கடையாகப் புத்தகம் போட்டேன். பின் திருவல்லிக்கேணியில் புத்தகக் கடையை நிரந்தரமாக வைத்தேன். உலகப் பத்திரிகைகள் அங்கே வரத் துவங்கியது. பிறகு நாமே பத்திரிகை ஆரம்பித்தால் என்னவென்று தோன்றியது.''

''சினிமா நாடகம் என்று அலைந்த நான் 'காதம்பரி' என்ற இலக்கிய இதழைத் தொடங்கினேன். இலக்கியத்திலேயே இருந்த எனது சகோதரர் ஜெயராமன் 'சினிமா' என்கிற இதழை நடத்தினார். அந்த காலத்திலேயே 'காதம்பரி' இதழுக்காக ரூபாய் ஒன்பதாயிரம் வரை நஷ்டம் அத்தோடு நிறுத்திவிட்டு பதிப்புத் துறையில் முழு கவனம் செலுத்தத் தொடங்கி விட்டேன்'' என்கிற ஏ கே. கோபாலனுக்கு வயது 82. அன்னா கரீனா'வை தமிழில்,

மொழி பெயர்க்கச் செய்து நம் நாட்டின் சுதந்திரம் பிறந்த அன்று அந்தப் புத்தக வெளியீட்டைச் சிறப்பாக நடத்தி இருக்கிறார். இன்றைய தமிழ் பதிப்புத் துறை பற்றிப் பேச்சைத் தொடர்ந்தார். ஏ. கே. கோபாலன்.

"ஆழமான சிந்தனைகள் கொண்ட நூல்கள் வருவது குறைந்து போயிற்று. சரத்சந்திரர், தாகூர், பிரேம்சந்த் படைப்புகளின் மொழிபெயர்ப்புகளை இவர்கள் திரைப்படம் ஆக்கும்போது தரக்குறைவாக செய்து விட்டார்கள் போதாக் குறைக்கு இப்போது மொழி பெயர்ப்பு நூல்களே குறைந்து போய்விட்டது. ஏ. கே. ஜெயராமன், த. நா. குமாரசாமி, குமுதினி போன்றோர் வரிசையில் இப்போது தமிழில் யாரும் முழுமுச்சாய் அதில் ஈடுபடுவாரில்லை.

"புதுமைப்பித்தன் மீது எங்கள் குடும்பத்திற்கு நிரம்ப மரியாதை உண்டு காந்தி மறைந்தபோது— 'காதம்பரி' இதழ் நின்றபோது மட்டுமே நான் கண்ணில் நீர்மல்க நின்றேன் என்பதுதான் உண்மை. புதுமைப்பித்தனிடமும் சரி வேறு எவரிடமும் சரி, பணம் தராமல் எங்கள் பதிப்புப் பணி ஒரு நாளும் நிகழ்ந்ததில்லை.

"உலகத்து நாவல்களை— நோபல் பரிசு பெற்ற பல்வேறு நாவல்களை உலக மொழிகளில் இருந்து தமிழுக்குக் கொண்டு வந்த முதல் பதிப்பாளர் நாங்கள் தான்" என்கிற ஏ.கே. கோபாலன்— இன்றைக்கும் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி என்று பல்வேறு மொழிகளில் ஈடுபாடு இருப்பதால் இவற்றில் 'பாகவதம்' செய்கிறார் இது தொடர்பாக ஹரிஹர குஹ பஜனாமிர்தம்' என்கிற ஒரு மிகப் பெரிய நூலையும் வெளியிட்டுள்ளார்.

தமிழ் தந்தது!

தமிழ்-பவுத்தத்துக்கு 'மணிமேகலை'யைத் தந்தது!
தமிழ்-சமணத்துக்கு 'நாலடியாரை'த் தந்தது!
தமிழ்-சைவத்துக்கு 'பெரியபுராணம்' 'திருவாசகம்' தந்தது!
தமிழ்-வைணவத்துக்கு 'கம்பராமயணம்', 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' தந்தது!
தமிழ்-இஸ்லாத்துக்கு தேம்பாவணி' தந்தது!
தமிழ்-கிறிஸ்தவத்துக்கு 'சீறாப்புராணம்' தந்தது'

—கவிஞர் குடியரசு.

தமிழக அரசின்

முதல் பரிசும்,

மக்களின் பாராட்டும்

பெற்ற படைப்பாளி

பெயர்	:	ஏ.வி. ராஜகோபால்
புனைப்பெயர்	:	ராஜ் (தமிழில்) கௌண்டியா (ஆங்கிலம்)
விலாசம்	:	42, காம கோடி நகர் 4வது குறுக்குத் தெரு, வளசரவாக்கம், சென்னை-87.
படிப்பு	:	பி.ஏ, எஃப். சி.ஏ
வயது	:	57
தொழில்	:	கணக்குத் தணிக்கையாளர் (ஆடிட்டர்)
நிறுவனத்தின் பெயர்	:	ராவ் & கோபால்
விலாசம்	:	25, சலிவன் கார்டன் தெரு, மயிலாப்பூர், சென்னை—4.
குடும்பம்	:	மனைவி R. மீனாட்சி சுஜயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனர் மகள்கள் : இருவர்

ஒருவர் மணமுடித்து அமெரிக்காவில் வேலையிலிருக்கிறார்.
மற்றவர் சென்னையில் கணக்குத் தணிக்கையாளருக்கு படிக்கிறார்.

பிற அம்சங்கள் :

அ. திரைப்படச் சங்கங்களில் ஈடுபாடு

1. சர்வதேச திரைப்பட திறனாய்வு சங்கம் என்ற அமைப்பின் பொதுக் காரியதரிசி
2. தமிழ்நாடு, பாண்டிச்சேரி பிலிம் சொஸைடிகளின் மாநில அமைப்பின் செயலாளர்
3. Federation of film Societies of India என்கிற தேசிய அமைப்பின் மத்திய குழு உறுப்பினர்,

ஆ. எழுத்துப்பணி

1. சிறுகதை எழுத்தாளர் கிட்டத் தட்ட பத்து வருடங்களாக எழுதி வருகிறார்.
வெளியிட்ட சிறுகதைத் தொகுப்புகள்

1. ஒற்றை ரோஜா— 1992
2. பார்வை நேரம்— 1993
3. மல்லிகை முள் —1994
4. நிகழ் கோபுரம் —1995
வெளியிடப்பட்ட மற்றொரு புத்தகம். திரைப்படச்சங்கங்கள்— ஏன்; எப்படி?

2. ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் வட இந்தியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கிடைத்த பரிசுகள் :

அங்கீகாரங்கள்

1. 1992-ல் வெளியான ஒற்றை ரோஜா—தொகுப்பில் இடம் பெற்ற 'அதற்கெல்லாம் அவசியமில்லை' என்ற சிறுகதை உத்திரப்பிரதேச மாநில அரசின் சிறுகதைக் கான முதல் பரிசைப்பெற்றது.

2. 1993-இல் வெளியான பார்வை நேரம் சிறந்த நூலுக்கான இரண்டாம் பரிசை பாரத ஸ்டேட் வங்கியிடம் பெற்றுத் தந்தது.
இதே புத்தகம் தமிழக அரசின் சிறுகதைக்கான மூன்றாம் பரிசைப் பெற்றுத் தந்தது.

3. 1994-இல் வெளியிடப்பட்ட 'மல்லிகை முள்' சிறுகதைக் கான முதல் பரிசை தமிழக அரசிடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதில் இடம் பெற்ற ஒரு சிறு கதை 'தமிழ் அரசி'ல் சென்னை மாவட்டத் திற்கான பரிசை பெற்றுள்ளது.

4. டிசம்பர் 1995, 18ம்-தேதி வெளியிடப்பட்ட 'நிழல் கோபுரம்' மதிப்புமிகு. இராம வீரப்பன் அவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளது.

நூலகத் தந்தை எஸ். ஆர். ரங்கநாதனின் சம காலத்தவர்

நூலக அறிஞர் திரு. அ. இராச பூபதி



தந்தை: அப்பாவுப்பிள்ளை,

பிறப்பு: 17.8.1908.

பிறந்த இடம்: தென் மகாதேவமங்கலம்
வடாற்காடு மாவட்டம்

கல்வி: பி. ஏ., எல். டி., டி. எல். எஸ்,

பள்ளி: திருவண்ணாமலை டேனிஷ் பள்ளி

கல்லூரி: ஊரிசு கல்லூரி, வேலூர். பச்சையப்பன் கல்லூரி, சென்னை

தொடக்ககாலப்பணி: பள்ளி ஆசிரியர், இந்து உயர் பள்ளி ஆம்பூர் (ஓராண்டு மட்டும்)

சென்னைப்பல்கலைக்கழகத்தில்: 40 ஆண்டுகளுக்கு மேல் நூலகத்தில்— சூப்ரன்டெண்ட்டாக ஓய்வு.

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன், எம். ஓ. தாமஸ் பி. ஜனார்தன நாயுடு, வி. எஸ். முத்தையா பி. சீனிவாசன் முதலியோருடன் பணியாற்றி புகழ் பெற்றவர்.

நூலகக்கல்வி போதகர். சி எல். எஸ். டி. எல். எஸ்.

அமரர் அ. திருமலை முத்துசாமி, அமரர். மோகன்ராஜ் இவரின் சீடர்கள், மாணாக்கர்கள்.

ஓய்வுக்குப்பின்னர், டாக்டர் வி. சண்முக சுந்தரம் தலைமையிலிருந்து பொருளியல் நூலகம். பி.ஐ. பதிப் பாளர் நூலகம், பெரியார் நூலகம், ஆகியவற்றில் பணி யாற்றி மகிழ்ந்தவர்.

மனைவி: திருமதி பால குசாம்பாள் மக்கள்: இரா. இராச சேகரன், பேராசிரியர் டாக்டர் இரா, குமாரவேலன், தமிழ்த் துறை, பச்சைப்பன் கல்லூரி, சென்னை. திரு இரா.இளங்கோ. திருமதி. விமலா, திருமதி. பானுமதி

மறைவு: 13.11.1995. **88ம்** வயதில்.

நூலக உணர்வு மிக்கவர் தகவல் நூலகப்பணியில் சிறப் பாக பணியாற்றி பலரின் பாராட்டுதல்களைப் பெற்றவர்.

கம்ப்யூட்டர்:

எந்தப்பொருன்

வேலைப் பளுவையும், வேலை நேரத்தையும் குறைக்கின்றதோ அந்தப் பொருளை சுலபமாக சந்தையில் விற்றுவிடலாம்.

நூலகம் : 1 ஜனவரி, 1996 இலக்கியம் : 5

. Edited. printed and published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL, M. A., M. Lib. Sc., Ph. D.; from 6, Mu. Va. Street, Arumbakkam. MADRAS — 600 106. Phone No. 484 5034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS—600 029.

"சங்கப்பலகை"
டாக்டர் அப்பாஸ்
இப்ராகிம்

நிஜ எழுத்தாளர்
"ராஜ்"



நூலக இலக்கியம் அளித்த
"முதல்" பரிசு ரூ. 100 பெற்ற
நூலக அறிவியல் மாணவர்
நூலகர் இல. ராமகிருஷ்ணன்

உலக மொழி நூல்களை
(1930 - 40) தமிழில்
தந்த முதல் பதிப்பாளர்
திரு ஏ. கே. கோபாலன்

அட்டை அச்சிட்டோர் :
மெட்ரோ பிரிண்டர்ஸ் & பேக்கேஜிங் இண்டஸ்ட்ரி சென்னை-29. © 4.2034

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly January, 1996
Regd No. TN / MS (N) / 922 *R.Dis 4441 / 95.E*

நீதிக் பெரியார் அப்துல் மஜீது
''பெண்ணோர் இனாதுர் ஈகையே'' நூலை வெளியிட,
ராணி ஆசிரியர் டாக்டர் அ. மா. சாமி பெற்றுக் கொண்டார்.